# கிராமநலம்


**மார்ச் 1968**

தமிழக சட்ட[illegible] கூட்டத் தொடரை

தொடங்கி வைத்து, மேதகு ஆளுநர்

சர்தார் உஜ்ஜல்சிங் உரையாற்றினர்

(10-2-68)



*1968-69-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கை—*



1

# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 மார்ச் 1968 நெல் 6

## 1968-69-ம் ஆண்டு, நிதி நிலை அறிக்கை - விளக்கக் கண்ணாடி

### (மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் ஆற்றிய உரை)

" இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த
வகுத்தலும் வல்லது அரசு "

என்ற குறள் நெறிக்கிணங்க, நமது மாநிலத்தின் நிதிநிலையை விளக்கும் கண்ணாடியாக, மாண்புமிகு முதலமைச்சரும் நிதியமைச்சருமான திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் 1968—69-ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தை, 28—2—1968-ல் சட்டப் பேரவையின் முன்வைத்து, உரையாற்றினர். மக்களாட்சியில் இந்த விவரங்களை அனைவரும் தெளிவாக அறிந்துகொள்ளக் கடமைப்பட்டுள்ளனர். எனவே, அந்த உரையின் முழு விவரத்தை, ஒரு சில விளக்கப் படங்களுடன், இந்தச் சிறப்பிதழில் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.—ஆசிரியர்.

" மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1968—69-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இப்பேரவையின்கண் வைத்திடவேண்டி நான் முன்வந்துள்ளேன். 1966—67-ம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளும், 1967—68-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளும் இதனுடன் வைக்கப்பட்டுள்ளன. இன்றைய சமுதாயத்தில், அரசு ஆற்ற வேண்டிய பங்கு பற்றிய நமது எண்ணங்களிலே ஏற்பட்ட கருத்துப் புரட்சிக்கிணங்க, சில ஆண்டுகளாகவே, வரவு-செலவுத் திட்டம், அரசின் வரவினங்களையும் செலவினங்களையும் குறிக்கும் வெறும் விவர அறிக்கையாக நிலவிய நிலைமாறிவிட்டது. குடியாட்சியில் மக்களின் நம்பிக்கையைப்பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் குறிக்கோள்களையும் கோட்பாடுகளையும் எய்துவதற்கு ஏற்ற வலிமை வாய்ந்த ஒரு கருவியாகவே, தற்கால வரவு-செலவுத்திட்டம் அமைகிறது. இவ்வரசின் ஓராண்டு நிறைவோடு, இவ்வரவு-செலவுத் திட்டமும் இணைந்து அமைகிறதாதலின், நடப்பு ஆண்டின் திருத்த மதிப்பீடுகளும், வரும் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளும், மக்கள் முன் சிறப்புற வைத்த கொள்கைகளை அரசு நிறைவேற்றுவதில் எவ்வாறு பயன்படும் வண்ணம் அமைந்துள்ளனவென்பதை இத் தருணத்தில் சற்று விரிவாக நான் விளக்க வேண்டுமென இப்பேரவை எதிர்பார்ப்பது சாலப் பொருத்தமாகும்.

---

முதல் அட்டைப்பட விளக்கம் : தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவையில், மேதகு தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள், 10-2-68 அன்று, சட்டமன்றக் கூட்டத் தொடரினைத் துவக்கிவைத்து உரையாற்றுகிறார்.

இரண்டாவது அட்டைப்படம் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 28-2-68-ல், 1968-69-ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தை, சட்டப்பேரவையின் முன் வைத்து, உரையாற்றுகிறார்.

மூன்றாவது அட்டைப்படம் : சட்டப் பேரவையின் மற்றொரு பகுதி.

2. அவ்வாறு செய்யும்போது, இந்த அரசு பதவி ஏற்குங்காலையில் நாட்டிலே நிலவிய பொருளாதார நிலையைப் பற்றி, இம்மாமன்றத்தின் நாட்டத்திற்குக் கொண்டுவர வேண்டியிருப்பதை இம்மன்றம் பொறுத் தருளுமென நம்புகின்றேன். அவ்வமயம், மூன்றும் திட்டம் முழுமையாக நிறைவு பெற்று, நான்காம் திட்டம் முடிவு செய்யப்படுமா என்கிற ஐயப்பாடு தெளியாமலே ஆண்டு ஒன்றும் கடந்து நின்றது. நிதி யளவில் பார்க்கும்போது, மூன்றும் திட்டம் எதிர் பார்த்த அளவிற்கு மேலாகவே நிறைவேற்றப் பட்டிருந்தது. முதற்கண் 7,500 கோடி ரூபாய் மட்டுமே வகை செய்யப்பட்டிருந்த நிதி ஒதுக்கத்திற்கு மாருக, 8,630 கோடி ரூபாயளவில் செலவினம் உயர்ந் திருந்தது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான கூடுதல் வரியினங்களை ஏற்றதன் மூலம், தங்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட தியாகத்தையும் நாட்டு மக்கள் செய்து முடித்தார்கள். அத்திட்டத்தில் திரட்டக் கருதி யிருந்த 1,710 கோடி ரூபாய் கூடுதல் வரிகளுக்கு மாருக, மத்திய, மாநில அரசுகள் கூடுதல் வரிகளின் வாயிலாக 2,880 கோடி ரூபாயளவிற்கு நிதி வசதிகளைத் திரட்டின. முதற்கண் மதிப்பிடப்பட்ட 1,100 கோடி ரூபாய் அள விற்கு மாருக, மத்திய அரசு மட்டும் விதித்துச் செயல் படுத்திய வரிகளின் மூலம் 2,270 கோடி ரூபாயளவிற்கு மக்கள் மீது கூடுதலாகச் சுமை ஏற்றப்பட்டது. செழுங் குடி மக்கள் மீது விழும் வருமான வரி, நிறுவன வரி (Corporation tax), சொத்து வரி போன்ற நேர்முக வரிகள் மூலம் 320 கோடி ரூபாய் மட்டுமே மத்திய அரசு திரட்டியது. எஞ்சிய தொகை, பாமர மனிதனின் அன்ருட வாழ்க்கைச் செலவின் மீது கடுமையான விளை வுகளை ஏற்படுத்த வல்லதும், உற்பத்திச் செலவுகளை பெருமளவிற்குக் கூட்டும் வகையிலுமுள்ள ஆயத் தீர்வை, சுங்க வரிகள், இரயில் கட்டணங்களில் செய்த சரிக் கட்டுதல்கள் போன்ற மறைமுக வரிகளின் வடிவில் எழுப் பப்பட்டது. நிதி அளவில் திட்டம் எதிர்பார்த்த அளவிற்குமேல் நிறைவேற்றப்பட்டிருந்தாலும், முக்கிய மான துறைகளில் குறிக்கோள் அளவுகள் பெருமளவிற்கு

பொருளாதாரப் பின்னணி.


எய்தப்படவில்லை. 1964—65-ம் ஆண்டு ஒன்றைத் தவிர, மூன்றும் திட்டக் காலத்தில் வேளாண்மை விளைச்சல் எந்த வகையிலும் உயரவில்லை. 1965—66-ல் 10 கோடி டன் உணவு உற்பத்தி செய்ய வேண்டும் என்பது குறிக்கோள் அளவு. ஆனால் 7·3 கோடி டன் உணவு தானியங்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன. நாட்டு வருவாய் (National Income) ஆண்டுதோறும் சராசரி 5 சதவீதம் வளர்ச்சி அடைய வேண்டுமென்கிற குறிக்கோள் அளவிற்கெதிராக, 2·8 சத வீத அளவில் மட்டுமே வளர்ச்சி அடைந்தது. மக்கள் தொகை நிலையாக வளர்ச்சியடைந்து வந்ததால், நபர்வாரி வருவாய், மூன்றும் திட்டத்தில் ஆண்டிற்குச் சராசரி 0·3 சதவீத அளவில் மட்டுமே வளர்ச்சியடைந்ததாகக் கணக்கிடப்பட்டது. இவ்வாறாக, மலைப்பு எய்தும் அளவிற்கு செலவு செய்யப்பட்டிருந்தும், கூடுதல் வரிகளின் வடிவில் மக்கள் கணிசமான அளவிற்கு அல்லல்பட்ட போதிலும், நமது மக்களின் வாழ்க்கை நிலை எவ்வகையிலும் வளர்ச்சி பெறவில்லை. வேளாண்மை உற்பத்திப் பெருக்கம் நிறைவேறாது போனதோடு, திட்டத்தின் பெயரால் பெருந் தொகைகள் செலவிடப்பட்டதும் ஒன்று சேர்ந்து, விலைவாசிகளின் ஏற்றத்தை மேலும் உயர்த்தி பெரும்பான்மையான மக்களைத் துன்பத்தில் ஆழ்த்தின. மூன்றும் திட்டக் கால அளவை முழுமையாக எடுத்துக் கொண்டால், அதற்கு முந்திய 10 ஆண்டுகளில் ஏற்பட்ட விலைவாசி உயர்வினைவிட மிக அதிக அளவில், 36·4 சதவீத அளவிற்கு விலைவாசிகள் உயர்ந்தன. இவ்விலைவாசிகளின் பொதுவான ஏற்றம் ஒருபுறமிருக்க, உணவுப் பொருள்களின் விலைவாசிகள் மட்டும் 48 சதவீதம் உயர்ந்தன. விலைவாசிகள் துறையில் 1966—67-லும் எவ்வித மேம்பாடும் காணப்படவில்லை. 1966 ஜூன் திங்களில் ரூபாயின் நாணய மாற்று வீதம் குறைக்கப்பட்டதால், நிலைமை மேலும் சீர்கேடுற்றது. அதன் காரணமாக, 1966—67-ல் விலைவாசிகளின் அளவு 16·5 சதவீதம் உயர்ந்தது. உணவு தானிய விலைகளின் செங்குத்தான ஏற்றத்தினாலும், வேளாண்மை உற்பத்தியின் வீழ்ச்சியினாலும், பாமர மக்களின் வாங்கும் திறன் கடுமையாகக் கரைய முற்பட்டது. இதன் விளைவாகத்






G.N.—1A

தொழில் துறைப் பொருள்களின் தேவை பெரிதும் சரிந்து, தொழில்களில் மந்த நிலையும் வேலையின்மையும் மலிந்தன. இவ்வண்ணம் பல தொழில்களில் உற்பத்தித் திறன் ஒருபுறம் விஞ்சிய நிலையை அடைந்திருந்தும், அதே நேரத்தில், மறுபுறம் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படாமலுள்ள முரண்பாடான நிலையொன்று உருவாயிற்று. இவ்வாறான ஒரு நிலை ஏற்படாமல் காப்பதே திட்டமிட்ட பொருளாதாரத்தின் குறிப்பிட்ட நோக்கமாக இருத்தல் வேண்டும் எனினும், இந்நிலை ஏற்பட்டது விந்தையே.




3. இதுதான், இந்த மாநில அலுவல்களை நடத்துவதற்கு நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டபோது எங்களை எதிர்நோக்கியிருந்த பொருளாதார நிலையாகும். நமது மக்கள் முன் நின்ற சிக்கல்களுக்குச் செவ்விய முறையில் தீர்வு காண்பது முற்றிலும் மாநில அரசின் அதிகார வரம்புக்குள் இல்லை என்பதும் விரைவில் தெளிவாகியது. அரசியலமைப்பில் செய்துள்ள அதிகார வரம்பின்கீழ், நாணயச் செலாவணியை முறைப்படுத்துதல், வங்கி அலுவல்கள், அயல்நாட்டு வாணிபம் ஆகிய துறைகளுக்குப் பொறுப்பு வகிக்கிற மத்திய அரசு மட்டுமே, நமது பொருளாதாரம் எந்த வழிகளில் முன்னேற்றம் அடையவேண்டுமென்று வரையறுக்கும் நிலையிலுள்ளது. மக்களின் நலனைக் கருதி இந்த அரசு அவசியமென்று கருதக்கூடிய திட்டங்களுக்கு மத்திய அரசு பொருத்தமான பொருளாதாரக் கோட்பாடுகளின் வாயிலாக ஆதரவு அளித்தாக வேண்டும். இந்தச் சூழலில் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கும் பணி, மத்திய, மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பாகுமென்பதும் இதில் மத்திய அரசின் பங்கு மேலோங்கி நிற்பதும் வெள்ளிடை மலையாகும். எனவே, நமது மக்களை எதிர்நோக்கியுள்ள பொருளாதார இடர்ப்பாடுகளுக்குத் தற்போதைய இவ்வரவு-செலவுத் திட்டம் செவ்விய முறையில் துயர் தணிப்பு அளிக்கிறதா என்று முடிவு செய்கின்ற நேரத்தில், குறைந்த அளவே பங்குள்ள மாநில அரசு ஒல்லும் வகையில் மக்களின் நலன் கருதித்

தன்னிடம் எதிர்பார்க்கப்படுகிற அனைத்தையும் ஆற்றியுள்ளதா என்பதை இம்மாமன்றம் ஆய்வு செய்தால், அது நனிமிகப் பொருத்தமானதாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

பொருளாதார வளர்ச்சியில் மாநில அரசின்பங்கு

4. பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில் மாநில அரசின் பெரும் பொறுப்புகள் எவை யென்பதைப் பற்றிக் குறிப்பிடுவது கடினமானதல்ல வென்பது எனது கருத்தாகும். பற்பல வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதற்கு, ஏற்றதும் தகவும் உள்ள தொழில் நுட்ப-நிர்வாக அமைப்பு ஒன்றை உருவாக்கிக் கொள்வது மாநில அரசின் முக்கிய முதற் பொறுப்பாகும். அப்பால், திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றம் ஏற்படுங்காலத்தில் முளைக்கின்ற புதிய பொறுப்புக்களையும் இடையிலே எழுகின்ற அறைகூவல்களையும் ஏற்கும் வகையில், இந்த அமைப்பைச் செவ்விய முறையில் இடைவிடாது பேணிவரவேண்டியுள்ளது. குறித்த முறைக்கிணங்க, பாசனம், மின்சாரம், வேளாண்மை விளைச்சல் போன்ற முக்கிய துறைகளில் திட்ட வேலைகளை நிறைவேற்றிச் செல்லத் தக்க நிர்வாக இயந்திரமொன்றினை நமது மாநிலத்தில் உருவாக்கியுள்ளோம் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். திட்டத்தில் அடங்கிய வேலைகளை நிறைவேற்றுவதற்காக மாநில அரசு இயன்ற பெருமளவிற்கு நிதி வசதிகளை வகை செய்யும் பொருட்டு, பொதுவாகத் திட்டத்தின்பாற்படாத செலவினங்களையும், குறிப்பாக வளர்ச்சித் தலைப்பின்பால் வாராத செலவினங்களையும் வரம்புகளுக்குள் கண்டிப்பாக நிறுத்த வேண்டியதன் அவசியத்தைக் குறித்தும் முதன்மையாக நாட்டம் செலுத்த வேண்டும். திட்டத்திற்குத் தேவையான நிதி வசதிகளை இயன்ற அளவிற்கு ஒதுக்கும் வகையில், இம்மாநிலத்தில் வளர்ச்சித் தலைப்பின்பாற்படாத செலவினங்களைப் பெரும் அளவிற்குக் கட்டுப்படுத்தியுள்ளோம் என்பதையும் மெய்ப்பித்துக்காட்ட முடியும். திட்டத்திற்கு உறுதுணையாயிருக்க வேண்டுமென்கிற நமது அவாவில், வளர்ச்சிச் செலவினங்களின் கீழ்வரும் பேணுதற் செலவுகளையும் (maintenance expenditure) வரம்பிற்குள் நிறுத்துவதில் விழிப்புடன் இருந்துவந்துள்ளோம்.





G.N.—2

தனது நிதி வசதிகளை இவ்வாறு பாதுகாத்து வருவது ஒரு புறமிருக்க, திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான கூடுதல் நிதி வசதிகளையும் மாநில அரசு திரட்ட வேண்டுமென எதிர்பார்க்கப்படுவது இயற்கையே. இத் துறையிலும் நமது மாநிலத்தின் சாதனை, எவ்விதக் கோல் கொண்டு அளப்பினும், செவ்விதாய்—பாராட்டு தற்குரியதாய் உள்ளது. நான்காம் திட்ட முதற் குறிப்பில், 1970–71-ல் முடிவடைகிற ஐந்தாண்டுக் கால அளவில், 825 கோடி ரூபாய் அளவிற்கு மாநிலங்கள் கூடுதல் நிதி வசதிகளைத் திரட்ட வேண்டுமென எதிர் பார்க்கப்பட்டது. நமது மாநிலத்தின் நான்காம் திட்ட முதலீடு 564 கோடி ரூபாயென இறுதி செய்யப்பட்டது. இது, அனைத்து மாநிலத் திட்டங்களுக்காக எதிர்ப்பார்க் கப்பட்ட மொத்த முதலீட்டில், 8 சத வீதமாக அமைந்தது. இவ்வாறிருப்பினும், நமது மாநிலம், மாநிலங்கள் அனைத்தும் சேர்ந்து திரட்ட வேண்டிய கூடுதல் வரி வசதிகளில் 12·5 சதவீதமாக அமைகின்ற, 105 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதல் நிதி வசதி திரட்டுமாறு வேண்டப்பட்டது. கூடுதல் நிதி வசதி களைத் திரட்டுவது குறித்து நமக்கு விதிக்கப்பட்ட குறிக் கோள் அளவு, நாம் இத் துறையில் ஏற்கெனவே எடுத்துள்ள முயற்சியுடனும், நமது திட்ட அளவுடனும் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து மிக அதிகமென்றே தோன்றுகிறது. ஆயினும், நமது மாநில முன்னேற்றத் திற்கு மிகத் தேவையெனக் கருதப்படுகிற குறைந்த அளவுத் திட்டம், நிதி வசதிக் குறைவினால் தடைப் பட்டு நின்றுவிடக் கூடாதே என்கிற கவலையினால் இக் குறிக்கோள் அளவினை முந்தைய அரசு ஏற்றுக் கொண்டது. திட்டத்திற்கு வேண்டிய நிதி வசதிகள் அனைத்தையும் திரட்டுவதாக மாநிலங்கள் உற்சாகத் துடன் வாக்களித்துவிட்டு, தங்கள் வாக்குறுதியைப் பின்னர் நிறைவேற்ற முயல்வதேயில்லையென்று பொது வாகக் குறை கூறப்படுவதை நாம் அடிக்கடி கேட்டிருக் கிறோம். நான்காம் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுப்பது தள்ளிப் போடப்பட்டிருப்பினும், ஆண்டுத்







திட்டங்களில் செய்துள்ள முதலீடுகள், திட்ட ஆணைக் குழுவினால் முடிவு செய்யப்பட்டுள்ள ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலீடுகளைக் காட்டிலும் கணிசமான அளவிற்குக் குறைவாக இருப்பினும், இம் மாநிலம் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரட்டும் குறிக்கோள் அளவுகளைப் பெருமளவிற்கு நிறைவேற்றியுள்ளதென் பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்றேன். 1965 நவம்பர் திங்களில், முன்னைய அரசினால் விதிக்கப்பட்ட பற்பல வரியினங்களின் மூலம், சுமார் 50 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிட்டுமென்று கணக்கிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டச் செயற் குறிப்புகளின் பகுதியாக, கடந்த ஜூன் திங்களில் இப் பேரவை ஏற்றுக்கொண்ட வரியினங்களின் வாயிலாக, 1970–71-ல் முடிவடையும் கால அளவில், 32 கோடி ரூபாய் மேலும் வருவாய் கிட்டும். எனவே, திட்ட ஆணைக் குழு விதித்துள்ளபடி கூடுதல் வரி விதிப்பின் மூலம் திரட்ட வேண்டிய 105 கோடி ரூபாய் குறிக் கோள் அளவில், நாம் ஏற்கனவே மேற்கொண்ட நடவடிக்கைகளின் மூலம் 82 கோடி ரூபாய் கிட்டும். அதாவது, இம் மாநிலம் தனது குறிக்கோள் அளவில் 80 சதவீத அளவினை நிறைவேற்றியுள்ளது. எனக்குக் கிடைத்துள்ள தகவல்படி, நான்காம் திட்டத் திற்கான நிதி வசதிகளைத் திரட்டுவதைப் பொறுத்த வரையில், வேறு எந்த மாநிலமும், நமது மாநிலத்தைப் போன்று இந்த அளவிற்குச் சிறப்புறச் செயல்படவில்லை யெனத் தெரிகிறது.

5. மாநில அரசு, தனது சொந்த நிதி வசதிகளையும் மத்திய அரசு வகை செய்கிற நிதி வசதிகளையும் பயன் படுத்துங்காலையில், திட்டம் குறித்த பொருத்தமான முறைவைப்புகளைப் பின்பற்ற வேண்டுமென்றும், பொருளாதார நிலையைப் பெருமளவில் உரமூட்டுவதற்கு உதவியாய் அமையாத, நேரடியாகவோ அன்றி மறைமுக மாகவோ—ஆதாயம் தாராத புறக்கோலத் திட்டங் களில் நிதி வசதிகளைக் குறிப்பாக விரயம் செய்யக் கூடாது என்றும் எதிர்பார்ப்பது நியாயமானதேயாகும்.

இந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும் விரய மாகிற திட்டங்களை நாம் தவிர்த்திருப்பதோடு, நம் முடைய திறமைக்குள் செவ்விய முறையில் நிறைவேற்றி, நிர்வகிக்கக்கூடிய திட்டங்களில் மட்டுமே நாம் நாட்டம் செலுத்தியிருக்கிறோம். இந்தத் திட்டங்களே, பொது வாக நமது மாநிலப் பொருளாதாரத்தை வளமாக்கும் சிறந்த திட்டங்களாகும். பெரியதொரு திட்டத்தை நிறைவேற்றுவதால் மக்களின் வாங்கும் திறன் பெரு மளவில் விஞ்சும். எனவே, இன்றியமையாப் பொருள் களின் விலைவாசிகளை உரிய வரம்புகளுக்குள் நிறுத்தும் பொருட்டு, அவற்றை முறைப்படுத்தி வழங்குவதற்கான செவ்விய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டு மென்பதையும் நாம் உணர்ந்திருக்கிறோம். இந்தத் துறையிலும், கடந்த ஆண்டில் மாநில அரசு தனது பொறுப்புக்களைச் சீரிய முறையில் நிறைவேற்றி யுள்ளது என்பதை அழுத்தமுடன் கூற விழைகிறேன். உணவு தானியக் கொள்முதல் திட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்தியதன் வாயிலாக, தானி யங்கள் இடையீடின்றி வழங்குவதற்கான ஒரு நிலைமையை உருவாக்க முடிந்தது. நாட்டின் வேறெந்தப் பகுதியையும்விட, உணவு தானியங்களின் வெளி அங்காடி விலை நமது மாநிலத்தில் நியாயமான அளவில் நிலைபெற்றுள்ளது.

மத்திய உதவி யின் பங்கு.


6. இங்ஙனமெல்லாம் செயலாற்றி வந்திருப்பினும், நமது மாநிலத்தில் வளர்ச்சி வேகம் தணியாது உயர்ந்த வண்ணமே இருக்கச் செய்ய இயலாமைக்கும், மக்களின் பலதிறப்பட்ட தேவைகளை முழு அளவில் நிறைவேற்ற ஏலாமைக்கும் காரணம் என்னவென்று இப்பேரவை யினரும், மக்களனைவரும் அறிய விழைவது இயல்பே யாகும். மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையே நிதி வசதிகளைப் பகிர்ந்தளிப்பதிலுள்ள அகன்ற வேறுபாடு ஒருபுறம் இருக்க, மத்திய அரசு, வளர்ச்சித் தலைப்பின்பாற்படாத தனது செலவினத்தைக் கட்டுப் படுத்தி நிறுத்தத் தவறியமையே, குறிப்பாகக் கடந்த






மூன்ருண்டுகளில் திட்ட முன்னேற்றம் தடைப்பட்டதற்குப் பெரிதும் காரணமாகும். அரசியலமைப்பின்படி, வளரும் வருவாய் வாய்ப்புகள் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டு, அதற்கு மாருக, கல்வி, பொதுச் சுகாதாரம் போன்ற, செலவினம் விரிந்து செல்லும் இயல்புடைய பரந்த பொறுப்புக்கள் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கென நிலையாக உயர்ந்து வந்துள்ள மத்திய உதவியின் வாயிலாக, இதுகாறும் இந்த ஏற்றத்தாழ்வு ஓரளவிற்காவது சரிக்கட்டப்பட்டு வந்தது. ஆனல், 1966 நவம்பர் திங்களில், இம் மாநிலத்தின் நான்காம் திட்டம் தாற்காலிகமாக முடிவு செய்யப்பட்டபோது, இத் திட்டத்தின் 564 கோடி ரூபாய் முதலீட்டில், 250 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே மத்திய உதவி கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. மொத்த முதலீட்டில் 44 சத வீத அளவில் நிற்கிற இந்த மத்திய உதவி, இதற்கு முந்தைய திட்டக் கால அளவுகளில் அளிக்கப்பட்டு வந்த மத்திய உதவியைக் காட்டிலும் அதிக அளவில் குறைந்திருந்தது. நான்காம் திட்டத்திற்குரிய மொத்த மத்திய உதவியை எடுத்துக் கொண்டாலும், இந்த மாநிலத்திற்கு வழங்குவதற்காக ஒப்புக்கொண்ட தொகை குறைவுதான். இம் மாநில மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படையில், நமக்கு 7·8 சத வீதத்திற்காவது மத்திய உதவி கிடைத்திருக்க வேண்டும். ஆனல் மாருக, ஒப்புக்கொள்ளப்பட்ட உதவி, மொத்த மத்திய உதவியில் 7 சத வீதமாகவே இருந்தது.

7. போதிய அளவில் இராத இந்த உதவியும், 1966—67-லும், 1967—68-லும் ஒத்த விகிதப்படி வழங்கப்படவில்லை. திட்ட ஆணைக் குழு நமது அழுத்தமான வேண்டுகோளுக்கிணங்கி, ஒப்புக்கொண்ட விகிதப்படி மத்திய உதவியை வரும் ஆண்டிற்கு நமக்கு ஒதுக்கித் தரவேண்டியதன் தேவையை ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனல், கடந்த இரண்டாண்டுகளில் ஏற்பட்ட உதவித் தொகைக் குறைவினைப் பொறுத்த மட்டில், ஆணைக் குழு, அதில் மூன்றில் ஒரு பங்கினை மட்டுமே ஈடுசெய்ய ஒப்புக்கொண்டுள்ளது. ஆனல்,



கடந்த இரண்டாண்டுகளில் ஏற்பட்ட குறைவினையும், அடுத்த ஆண்டில் நமக்குள்ள கடும் இடர்ப்பாடுகளையும் கருத்திற்கொண்டு, ஆணைக் குழு நியாயமாக முற்றிலும் ஈடு செய்திருக்க வேண்டும். சென்ற ஈராண்டுகளில் மாநிலங்களுக்குச் சேரவேண்டிய விகிதப் படியான உதவியைப் பெருத ஒரு சில மாநிலங்களுள், நான்காம் நிதி ஆணைக் குழுவின் தீர்ப்பினையொட்டி, திட்டத்திற்குப் புறம்பான கணக்கில் உபரி எதுவும் பெற்றிராத மாநிலம், நமது மாநிலம் ஒன்றுதான். இதைக் கருதியாவது, திட்ட ஆணைக் குழு நமது வேண்டு கோளுக்குச் செவி சாய்த்திருக்க வேண்டும்.

8. மத்திய உதவியை வழங்குவதில் இவ்வாறு ஏற்படும் தேக்கம் ஒருபுறமிருக்க, மாநிலத் திட்டங்கள் அனைத்திற்கும் சேர்ந்து வழங்கப்படும் மத்திய உதவி வளராது நின்றதோடு, ஓரளவிற்குக் குறைந்தும் விட்டது. மாநிலத் திட்டங்களுக்கு 1966-67-ல் வழங்கிய மொத்த மத்திய உதவி, 617 கோடி ரூபாய் அளவில் நின்றது. இது இயல்பாக, 1967-68-ல் 650 கோடி ரூபாய்க்கும், 1968-69-ல் 700 கோடி ரூபாய்க்குமாவது உயர்ந்திருக்க வேண்டும். இவ்வாறு உயர்த்தப்பட்டு, உடன்பாடான விகிதப்படி உதவித் தொகை வழங்கப்பட்டிருக்குமானுல், நடப்பாண்டிலோ, அடுத்த ஆண்டிலோ, நமக்கு ஏற்ற ஒரு திட்டத்தை நிறைவேற்று வதில் எந்த விதமான இடர்ப்பாடுகளும் ஏற்பட்டிருக் காது. ஆனால், 1967—68-ல் வழங்கிய மத்திய உதவியின் அளவு, 617 கோடி ரூபாயிலிருந்து 590 கோடி ரூபாயாகப் பெரிதும் வெட்டப்பட்டது. வேளாண்மை உற்பத்தியில் நடப்பாண்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும், அதன் விளைவாகத் தொழில் உற்பத்தியில் ஏற்படும் வளர்ச்சியையும் உள்ளத்திற்கொண்டு, வருகிற ஆண்டில் மத்திய நிதி வசதி பெருகுமென்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால், மீண்டும் மாநிலத் திட்டங்களுக்கான மத்திய உதவி, நடப்பாண்டு அளவான 590 கோடி ரூபாய் அளவில் நிறுத்தப்பட்டுள்ளது. மத்திய உதவியின் வளர்ச்சியில் ஏற்பட்டிருக்கிற இந்த இடை ஓய்வு ஒருபுறமிருக்க,

மாநிலங்கள் பங்குகொள்ளும் மத்திய வரிகள், எழுச்சி அடைய வேண்டிய அளவு எழுச்சி பெறவில்லை. வருமான வரி, ஆயத் தீர்வை போன்ற மத்திய வரிகள், பொருளாதார மந்தநிலை காரணமாகவும் ஏனைய காரணங்களினாலும் வளர்ச்சி அடையவில்லையென்று சொல்லித் தப்பினாலும், மாநிலங்கள் கடும் நிதி இடர்ப் பாடுகளை எதிர்நோக்கி இருக்கின்ற இந்த நேரத்தில், அவைகளுக்குத் துயர்தணிப்பு அளிப்பதற்காக, இப்போது 550 கோடி ரூபாய்க்கு மேல் நிலுவையாக நிற்கிறதென மதிப்பிடப்பட்டுள்ள, வருமான வரி நிலுவைகளை வசூலிப்பதற்கு ஓரளவிற்காவது அக்கறை யுடன் முயற்சிகள் செய்யப்படுமென்று நாம் எதிர் பார்க்கவேண்டும். வருமான வரியின்கீழ் கிடைக்கும் தொகையில் 75 சத வீதம் மாநிலங்களுக்கு இடையே பிரித்துக் கொடுக்கப்படவிருப்பதால், இது பெரும்பாலும் மாநில வருவாய் வாயில்களில் ஒன்றாகவே மாறியுள்ளது. இந்த வரியை விதித்துத் திரட்டும் பொறுப்பு மத்திய அரசைச் சார்ந்தது என்றாலும், முனைந்து வசூல் செய்வதில் மத்திய அரசின் இயந்திரத்தில் குறை ஏதும் ஏற்படின், மாநிலங்களே பெரிதும் அல்லற்படுகின்றன. வரி நிலுவைகளை வசூலிப்பதில் மாநில அரசுகள் செவ்வையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டு மென்று திட்ட ஆணைக் குழு வற்புறுத்தி வருகின்ற அதே நேரத்தில், தற்போது வருமான வரியைப் பொறுத்தவரையிலுள்ள ஏராளமான நிலுவைத் தொகைகளை வசூல் செய்வதற்கு மத்திய அரசின் மீதும், அதே அளவு வன்மையாக அது வற்புறுத்த வேண்டும். விற்பனை வரியிலிருந்து, 1966–67-ல் 44 கோடி ரூபாய் அளவுக்கு வருவாய் கிட்டியிருக்க, நமது மாநிலத்தில் நிலுவையில் நின்ற தொகையின் மொத்தம் 7 கோடி ரூபாய் மட்டுமே ஆகும். இது, இதற்கான ஆண்டு வருவாயில் 16 சத வீதமே. வருமான வரியின்கீழ் வசூலிக்கப்படாத நிலுவைத் தொகைகளும், ஏறக் குறைய இந்த அளவில் நிறுத்தப்பட்டிருக்குமானால், மாநிலங்களுக்குக் கூடுதல் நிதி வசதிகள் கிட்டும் நிலைமையில், கணிசமான வளர்ச்சி ஏற்பட்டிருக்கும்.






G.N —3a

வளரும் கடன் சுமை.

9. மாநிலத் திட்டங்களுக்கான மத்திய உதவியில் தேக்க நிலே ஏற்பட்டு, மத்திய வரிகளில் மாநிலங்களின் பங்கு வளர்ச்சி அடையாதுபோன அதே நேரத்தில், இந்திய அரசிற்குச் சேர வேண்டிய கடன்களைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பு மிக அதிகமாய் உயர்ந்துள்ளது. எனது, கடந்த ஜூன் திங்கள் வரவு-செலவுத் திட்ட உரையில், கடன் பொறுப்புக்கள் ஏறியவாறே செல்வதை இப்பேரவையின் நாட்டத்திற்குக் கொண்டுவரும் வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். முதல் திட்டத்தின் தொடக்கத்திலே, 1950-ல் இந்திய அரசிற்குச்சேரவேண்டிய கடன் 14 கோடி ரூபாயாக இருந்த தற்கு மாருக, மூன்ரும் திட்ட இறுதியில் 270 கோடி ரூபாய்க்கு மேல் உயர்ந்திருந்தது. அது, இப்போது 300 கோடி ரூபாய்க்கு மேல் உயர்ந்துள்ளது. மத்திய அரசிடமிருந்து பெறும் கடன்களுக்கு உரிய சராசரி வட்டி வீதம், 1955—56-ல் ஏறக்குறைய இரண்டரை சத வீதமாக இருந்ததற்கு மாருக, இப்போது நாலரை சத வீதத்திற்கு மேல் போகிறது. இவையிரண்டின் விளை வாக, இந்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய வட்டித் தொகை, 1950—51-ல் ஏறக்குறைய 41 லட்சம் ரூபாயாக இருந்தது, 1968—69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஏறத்தாழ 15 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது. இந்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய வட்டித் தொகைகளின் சுமையினுல் பல மாநிலங்கள் தடுமாறி நிற்கின்றன. எனவே, மாநில அளவில் செய்யப்படுகின்ற மூலதன முதலீட்டின் கணிசமான பகுதியின் ஆதாயமற்ற தன்மையை இந்திய அரசு கவனித்து, வட்டி வீதம் குறித்தும், கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டிய கால அளவினைக் குறித்தும் தற்போதுள்ள கடும் நிபந்தனைகளைத் தளர்த்தியமைத்து, ஆறுதல் அளிக்க வேண்டுமென, மாநில அரசுகள், இந்திய அரசுடனும், தொடர்ந்துவந்த நிதி ஆணைக் குழுக்களுடனும் வாதிட்டு வந்துள்ளன. பற்பல மாநிலங்களிலிருந்து தனக்குச் சேரவேண்டிய கடனைத் தொகுப்பதற்கான சில செயற் குறிப்புகளை இந்திய அரசு இப்போது அனுப்பியுள்ளது. ஆனுல், அது தயாரித்து




அனுப்பியுள்ள செயற்குறிப்புகள், பெரும் பலன் அளிக்க மாட்டா. குறிப்பாக, அவை, கடனில் கணிசமான பகுதி, நீர் வழங்குதல், புயல் அல்லது பஞ்சம் காரணமாக ஏற்பட்ட துயர் துடைத்தல் அல்லது பொற்கொல்லர்கள் துயர் துடைத்தல், அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல் போன்ற நோக்கங்களுக்குச் செலவிடப்பட்டுள்ளன என்பதையும், அத்தகைய கடன்கள், நியாயமாக மானியங்களாக மாற்றப்பட வேண்டியவை என்பதையும் நாட்டத்திற் கொள்ளாமல் தயாரிக்கப்பட்டுள்ளன.




10. வட்டிச் செலவுகள் ஒருபுறமிருக்க, 1968—69-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தை, நடப்பு ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகைகள் மிகவும் அதிகரித்துள்ளன. நடப்பு ஆண்டில் 20 கோடியே 30 இலட்சம் ரூபாய் திருப்பிச் செலுத்தவேண்டியிருப்பதற்கு மாறாக, நாம் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை, குறுகிய காலக் கடன்களை நீக்கிப் பார்த்தாலும், 7 கோடி ரூபாய் கூடுதலாகி, மொத்தம் 27 கோடியே 30 இலட்சம் ரூபாய் அளவில் உள்ளது. அடுத்த ஆண்டில், திட்டத்திற்கான நமது நிதி வசதிகள் கரைவதற்குக் காரணமான முக்கியக் கூறுகளில், இது ஒன்றாகும். நிதி ஆண்டினை முழுமையாக எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, ரிசர்வ் வங்கியிடமிருந்து அதிகப்பற்று (over draft) இன்றி, நாம் இதுகாறும் நமது நிதி நிலையைச் சமாளித்து வந்திருக்கிறோம் என்பதை அறிய, இப்பேரவை மகிழ்ச்சியுறுமென்று நம்புகிறேன். 1966—67-ல் மத்திய அரசு, ஒரு சில மாநிலங்களின் அதிகப்பற்றைத் தீர்ப்பதற்கென அவைகட்கு 108 கோடி ரூபாய் அளவிற்குச் சிறப்புதவி அளித்தது. அத்தகைய உதவியெதனையும் நாட வேண்டிய நிலை ஏற்படாத மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்று. நடப்பு ஆண்டில் கூட, பல மாநில அரசுகள் அதிகப்பற்று வாங்கும் நிலையை அடையலாமென்றும், மத்திய அரசு, அத்தகைய மாநில அரசுகளின் உதவிக்குச் செல்லக்கூடுமென்றும் நான் நினைக்கிறேன். மாநிலங்களது அதிகப்

பற்றுகளைக் கொடுத்துத் தீர்க்க, மத்திய அரசு, திட்டத்திற்குப் புறம்பாகச் சிறப்பு உதவி அளிக்க வேண்டிய நிலை ஏற்படாதிருப்பின், மாநிலத் திட்டங்களுக்கான மத்திய உதவி மேலும் உயர்ந்திருக்குமென்றும், நாமும் நமக்குரிய பங்கினை அடைந்திருப்போமென்றும் ஈண்டு எடுத்துக்காட்டுவது மிகையாகாது. மாநில அரசுகளின் நிதி நிலையை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை, இந்திய அரசு தொடங்க வேண்டுமென்றும், குறிப்பாக மாநில அரசுகள் முறையின்றி அதிகப் பற்று பெறும் நிலை அறவே நிறுத்தப்பட வேண்டுமென்றும் எல்லோராலும் உணரப்படுகிறது. எனவே, நிதி நெருக்கடி எதனிலும் சிக்காமல் இதுகாறும் இயங்கி வந்துள்ள ஒரு மாநிலம்—திட்டத்திற்குத் தேவையான நிதி வசதிகளைத்திரட்டுவதில் பின்னடையாத ஒரு மாநிலம்—தனது திட்டங்களின் வளர்ச்சி ஓட்டம் தளராமல் பேணி வருவதற்கென, அதற்கு இத்தருணத்தில் உதவிபுரிய வேண்டுவது கடமையாகும். அவ்வாறு உதவி அளிக்க மறுப்பது, கடந்த காலத்தில் நாம் விவேகத்துடன் செயலாற்றியமைக்காக நம்மைத் தண்டிப்பதற்கொப்பாகும். எனவே, அடுத்த ஆண்டில் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பு, ஏறக்குறைய நடப்பு ஆண்டில் இருக்கும் அளவிலேயே நிற்கும் வண்ணம், அடுத்த நிதியாண்டில் இந்திய அரசுக்குச் சேர வேண்டிய கடன்களைத் திருப்பிச் செலுத்துகின்ற கால அளவினை மாற்றியமைக்கும்படி இந்திய அரசினைக் கேட்டுள்ளோம். தொடக்கத்தில் மத்திய அரசு அளித்துள்ள பதில் சாதகமாக இல்லாதிருப்பினும், நமது பக்கம் நியாயம் இருப்பதால், இதனைத் தொடர்ந்து வற்புறுத்தவேண்டுமென மாநில அரசு விரும்புகிறது.





11. இந்திய அரசிற்குப் பெருந்தொகைகளைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருப்பதோடு, கடந்த காலத்தில் எழுப்பியுள்ள பெரிய பொதுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டிய பொறுப்பும் கூடியுள்ளது. நடப்பு ஆண்டில், 18 கோடி ரூபாய்க்கு வெளிச் சந்தைக் கடன் ஒன்றைத் திரட்டியுள்ளோம். தவணைக்காலம்




முடிவடைந்த ஒரு கடனுக்கு 10·5 கோடி ரூபாய் அளவில் திருப்பிச் செலுத்தப்பட்ட பின்னர், இக் கடன் வாயிலாக நிகரமாய்க் கிட்டிய நிதி வசதி, 7·5 கோடி ரூபாய் அளவினதாகும். அடுத்த ஆண்டில் நாம் திருப்பிச் செலுத்த வேண்டிய பெரிய வெளிச் சந்தைக் கடன் ஒன்று, 14 கோடி ரூபாய் அளவில் உள்ளது. இருபது கோடி ரூபாய் அளவில் புதிய கடன் ஒன்றினை நாம் திரட்ட முடியுமென்ற அடிப்படையில், இக் கடன் வாயிலாக அரசின் வழிவகை நிதி நிலைக்குக் கிட்டும் நிகர உதவி, 6 கோடி ரூபாய் அளவினதேயாகும். எனவே, நடப்பு ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இவ் வினத்தின்கீழ் மட்டும் திட்டத்திற்குத் தேவைப்படுகிற நிதி வசதியில் 1·5 கோடி ரூபாய் அளவில் துண்டுவிழும். கடந்த காலத்தில் கடன் கரைப்பு நிதிக்கென (Sinking Fund) போதிய நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்குமானால், காலத் தறுவாயிலுள்ள கடன்களுக்கான தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் எந்த விதமான சிக்கல்களும் ஏற்பட வேண்டியதில்லை. இது குறித்து, 1955-ம் ஆண்டிலிருந்து, இந்திய அரசின் சிறப்பான சில அறிவுரைகளைப் பின்பற்றி, கடன் கரைப்பு நிதிக்கு, நமது மாநிலத்தில் மிகக்குறைந்த வீதங்களில் மட்டுமே தொகை ஒதுக்கப்பட்டு வந்தது. இதற்கு முந்திய மூன்று நிதி ஆணைக் குழுக்களின் போக்கிலிருந்து வேறுபட்டு, நான்காம் நிதி ஆணைக்குழு, மாநில அரசுகள் திரட்டும் பொதுக்கடன்களினால் ஏற்படுகிற வட்டிச் செலவுகளும், கடன் கரைப்புச் செலவுகளும், மாநில நடைமுறைக் கணக்கில் சேரும் நிதிமாற்றம் (Devolution) பெறுவதற்குரிய நியாயமான செலவினமாகக் கருதப்பட வேண்டுமென்று உணர்ந்தது. ஆயினும், கடன் கரைப்பதற்கு வகை செய்ய வேண்டிய தொகைகளை முழு அளவில் ஒதுக்குவதற்குப் பதிலாக, நிதி ஆணைக் குழுவினர் நிதி மாற்றம் பற்றிய தங்கள் திட்டத்தில், பற்பல மாநிலங்களிலே நடைமுறையிலுள்ள பழக்கத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட தொகைகளை மட்டுமே சேர்த்துக்கொண்டார்கள். இந்த நடைமுறையினால், கால இறுதி அடைகின்ற கடன்களைத்



G.N.—4a




திருப்பிச் செலுத்துவதற்காக, சில மாநிலங்களுக்குப் பெயரளவுக்கான வீதங்களிலும், ஏனைய மாநிலங்களுக்குப் போதிய வீதங்களிலும், நிதி வசதிகளை வழங்க வகையேற்படுமென நிதி ஆணைக் குழு ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொண்டுள்ளது. இதன் விளைவாக, மாநிலங்கள் அனைத்தின் கடன் கரைப்பு நிதிக்கு கணக்கில் எடுத்துக்கொண்ட தொகைகள், ஐந்தாண்டுக் கால அளவில் 286 கோடி ரூபாய்க்குமேல் பெருமளவில் சென்றாலும், தமிழ் நாட்டில் கடந்த காலத்தில் கடன் கரைப்பு நிதி குறித்துப் பின்பற்றி வந்த பழக்கங்களின் அடிப்படையில், அதற்கு 8 கோடியே 90 இலட்சம் ரூபாய் மட்டுமே இந்த வகையில் கிட்டியது. நான்காம் நிதி ஆணைக்குழு பின்பற்றிய நடை முறை காரணமாக, தமிழ்நாடு போன்ற சில மாநிலங்களுக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்கிற உண்மையை, நான்காம் நிதி ஆணைக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான திரு. மோகன்லால் கௌதம் அவர்கள் தமது கருத்து வேற்றுமைக் குறிப்பில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். இதன் பின்னர், மாநிலங்கள் முழு அளவில் கடன் கரைப்புக்கென நிதி ஒதுக்கம் செய்யும் பொருட்டு, அவைகட்குச் சிறப்பு உதவி அளிக்க வேண்டியதன் தேவையை இந்திய அரசும் உணர்ந்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும். ஐந்தாண்டுக் கால அளவிற்கு, நான்காம் நிதி ஆணைக் குழுவின் நிதி மாற்றத் திட்டத்தின்கண் ஏற்கனவே அடங்கிய 8 கோடியே 90 இலட்சம் ரூபாய் நீங்கலாக, இந்திய அரசு வெளிச்சந்தைக் கடனைத் தீர்ப்பதற்கென 1966—67-லிருந்து தொடங்கி, ஆண்டொன்றுக்கு 6 கோடியே 5 இலட்சம் ரூபாய் அளவிற்குச் சிறப்பு மானியம் ஒன்றை அளிப்பதாக அறிவித்துள்ளது. ஆனால், இத்தொகையை ரொக்கமாக வழங்குவதற்கில்லையெனவும், திட்டத்திற்கு நிதி வசதி செய்வதற்கான பல்வகை வளர்ச்சிக் கடனில் ஒரு பகுதியை மானியமாக மாற்றிக்கொள்வதன் மூலம் இவ்வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் இயம்பியுள்ளனர். இந்த ஏற்பாட்டின்படி, நமது மாநிலம் பல்வகை வளர்ச்சிக் கடனுக்கு வட்டி செலுத்தும் வகையில் உடனடியாகச்



சிறிதளவிற்குப் பயனடையலாம்; **1970—71**-லிருந்து அசல் தவணைகளை மேலும் குறைத்துச் செலுத்துவதன் வாயிலாகச் சற்று கணிசமான அளவில் நலனடையலாம். ஆயினும், வருகிற ஆண்டில் திட்டத்திற்கு நிதி உதவுவதற்காகக் கூடுதல் நிதி வசதிகள் பெருமளவில் கிட்டும் வாய்ப்பு இல்லை. நிதி ஆணைக்குழு கடைப் பிடித்த நெறி முறைகளினால், பற்பல மாநிலங்களுக்கு நிதி வசதிகளை ஒதுக்குவதில் வேறுபாடு ஏற்பட்டுள்ள தென்று இந்திய அரசு உணர்ந்தபோதே, திட்டத்திற் காக ஏற்கனவே வழங்க ஒப்புக்கொண்ட உதவித் தொகையை ஈடுசெய்ய முற்படுவதற்கு மாறாக, திட்டத்திற்குரிய மத்திய உதவியின் உச்ச வரம்பிற்குப் புறம்பாகக் கடன் கரைப்பிற்கென சிறப்பு மானியம் ஒன்றை வழங்க முன்வந்திருக்க வேண்டும். தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், பீஹார், கேரளம், மத்தியப் பிரதேசம், மைசூர், ராஜஸ்தான் போன்ற ஒரு தொகுதி மாநிலங்களுக்குத் திட்ட உதவி, கடன் கரைப்பதற்கான சிறப்பு மானியத்தின் அளவிற்குச் சமமாகக் குறைந்து போகும் நிலையும், ஏற்கனவே நிதி ஆணைக்குழுவிட மிருந்து கடன் கரைப்பதற்கென போதிய உதவியைப் பெற்றுள்ள மகாராஷ்ட்ரம், குஜராத், உத்திரப் பிரதேசம் போன்ற ஏனைய மாநிலங்களுக்குத் திட்ட உதவி அவ்வாறு குறையாத ஒரு நிலையும், இந்திய அரசின் செயற் குறிப்புகளிலிருந்து உருவாவதற்கு இடமேற்பட்டுள்ளது. எனவே, *1966—67*, *1967—68*, **1968—69** ஆகிய இந்த மூன்றாண்டுகளுக்கும், கடன் கரைப்பதற்கென இந்திய அரசு வழங்கும் உதவித் தொகையான 18·15 கோடி ரூபாய், இயல்பான திட்ட உதவிக்குக் கூடுதலாக அமைவது தான் நேர்மையாகும். 18·15 கோடி ரூபாய் அளவிற்கு முழுமையாக உதவியளிக்க இந்திய அரசின் வழிவகை நிதி நிலை இடங்கொடுக்காவிடினும், திட்டத்திற்குரிய பல்வகை வளர்ச்சிக் கடனுக்கு ஈடுசெய்ய முற்படாமல், **1968—69**-ம் ஆண்டிற்குரிய உதவியான **6·05** கோடி ரூபாயையாவது வழங்குவதில், மத்திய அரசிற்கு

இடர்ப்பாடு ஏதும் இருக்காது என நினைக்கின்றேன். அவ்வாறு உதவியளிப்பின், வருகிற ஆண்டில் வளர்ச்சி வேகம் தணியாது போற்றிவர உதவியாயிருக்கும்.

அகவிலைப்படி வீத உயர்வுகளின் விளைவு.

12. கடன் பொறுப்புக்களின் சுமை பெருகியிருப்பது ஒரு புறமிருக்க, விலைவாசிகளின் ஏற்றத்தையொட்டியும் குறைந்த ஊதியம் பெறும் பணியாளர்களின் வாழ்க்கை நிலையைக் காக்க வேண்டிய தேவையைக் கருதியும், அரசாங்கப் பணியாளர்களின் அகவிலைப்படி வீதங்கள் அடுத்தடுத்து உயர்த்தப்பட்டது முற்றிலும் நியாய மானதாயிருப்பினும், அவை மாநில நிதி நிலையில் கடும் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. 1965—66-ம் ஆண்டின் இறுதி வரையில் வழங்கப்பட்ட அகவிலைப்படி வீத உயர்வுகள், நான்காம் நிதி ஆணைக்குழுவின் தீர்ப்பின் வாயிலாக ஈடு செய்யப்பட்டிருக்க, அதன் பின்னர் வழங்கியுள்ள உயர்வுகளுக்கு, அத்தகைய உதவி ஏதும் கிட்டவில்லை. மாநில அரசுகளின் நிலையான இக்குறையினைப் போக்க, ‘‘ கஜேந்திர காட்கர் ஆணைக்குழு ’’ திட்டவட்டமான சில செயற் குறிப்புக்களை வகுக்குமென எதிர்பார்த்திருந்தோம். ஆனால், அக்குழு, ‘‘ மாநில அரசுப் பணியாளர் கட்குச் செலுத்தப்படும் அகவிலைப்படி வீதங்கட்கும் மத்திய அரசுப் பணியாளர்கட்குச் செலுத்தப்படும் வீதங்கட்குமிடையே வேறுபாடு இருப்பது எந்த வகையிலும் நியாயமாகாது ’’ என்ற வகையில், திட்ட வட்டமான தனது முடிவைத் தெரிவித்து விட்டு, இதற்கென இந்திய அரசு சிறப்பு உதவி ஏதேனும் வழங்கும் கேள்வி, தனது ஆய்விற்குப் புறம்பானது என்று இயம்பி வாளாவிருந்துவிட்டது. அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் தோன்றக்கூடிய இப்பெற்றிவாய்ந்த பல்வேறு தேவையினங்கள் தனது ஆய்வில் அடங்கவில்லையென நான்காம் நிதி ஆணைக் குழுவே உணர்ந்து, ‘‘ அத்தகைய தேவைகளைக் குறித்து ஆய்வதற்கும், தேவைப்படும் இடங்களில் எல்லாம் மத்திய உதவியளிக்கவும் பொருத்தமான நடைமுறை ஒன்றினை வகுக்க வேண்டியிருக்கும் ’’ என அறிவித் துள்ளது. நிதி ஆணைக்குழுவின் முக்கியமான இப்பரி






வுரையைப் பின்பற்றி, இந்திய அரசு எந்தவிதமான நடவடிக்கையையும் மேற்கொள்ளாதது மிக்க வருத்தத்திற்குரிய ஒன்றாகும். ஆயினும், மத்திய உதவி கிட்டாத நிலையிலும், மத்திய அரசுப் பணியாளர்களுக்குரிய வீதங்களுக்கேற்ப, தங்கள் அகவிலைப்படி வீதங்களையும் உயர்த்த வேண்டுமென்கிற நமது பணியாளர்களின் வேண்டுகோளை மறுப்பது சரியல்லவென்று அரசு கருதியது. ஆகவே, **1967** டிசம்பர் 1-ம் நாள் சேரவேண்டிய நவம்பர் திங்கள் சம்பளத்திலிருந்து, நமது பணியாளர்களின் அகவிலைப்படி வீதங்கள் உயர்த்தப்பட்டிருப்பதை இப்பேரவையினர் நன்கு அறிவார்கள். 1967 டிசம்பர் 1-ம் நாளிலிருந்து, 1968 மார்ச் 1-ம் நாள் வரையிலான அகவிலைப்படியினை ரொக்கமாகச் செலுத்தாமல், பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதிக்கு வரவு வைத்து, மார்ச்சு மாதச் சம்பளத்திலிருந்து சேர வேண்டிய தொகையை ரொக்கமாகச் செலுத்தவிருக்கிறோம். இதற்கிணங்க, 1968–69-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அகவிலைப்படி காரணமாக, நடைமுறைக் கணக்கில் 9·2 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதல் பொறுப்பு ஏற்படும்.


நகர ஈட்டுப் படி.

13. ஐந்நூறு ரூபாய் வரையில் சம்பளம் பெறுகிற மாநில அரசுப் பணியாளர்களுக்கு, இந்திய அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தும் அதே வீதங்களில், நகர ஈட்டுப்படியும் வழங்க அனுமதி அளித்திருக்கிறோம். சென்னை மாநகர எல்லைகளுக்குள் இருக்கிற, மானிய உதவிபெறும் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும், நகர ஈட்டுப்படியை அதே வீதங்களில், அதே நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்குவதற்கும் இப்போது அரசு முடிவு செய்துள்ளது. பணியாளர்களிடம் இருந்து பெறப்பட்ட சில முறையீடுகளைக் கருத்திற்கொண்டு, அரசு இப்போது சென்னை மாநகர எல்லைகளை அடுத்து, ஏற்கெனவே சென்னை மாநகருக்குப் பொருந்தும் வீதங்களில் வீட்டு வாடகைப்படி வாங்கி வரும் பகுதிகளிலிருக்கும் பணியாளர்களுக்கும், நகர

ஈட்டுப்படி அதே வீதங்களிலும் அதே சம்பள வரையறைகளுக்குட்பட்டும் வழங்க முடிவு செய்துள்ளது. இம் முடிவிற்கிணங்க, நகர ஈட்டுப்படி, பரங்கிமலை, பல்லாவரம், குரோம்பேட்டை, தாம்பரம், அம்பத்தூர், வில்லிவாக்கம், ஆவடி, மாதவரம் போன்ற இடங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இப்பகுதிகளிலுள்ள மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்களும் ஊராட்சி மன்றங்களின் பணியாளர்களும், அரசு எடுத்துள்ள இம்முடிவின் பயனைப் பெறுவர். மதுரை நகரை, நகர ஈட்டுப்படி பெறுவதற்கு உரிமையுள்ள B-2 வகுப்பு நகரமாக இந்திய அரசு வகைப்படுத்தியுள்ளது. இதற்கிணங்க, மதுரை நகர எல்லைக்குள் உள்ள அலுவலகங்களில், 500 ரூபாய்க்குக் குறைந்து சம்பளம் வாங்குகிற அனைத்துப் பணியாளர்களுக்கும் அவர்களுடைய சம்பளத்தில் 5 சத வீத அளவில், 5 ரூபாய்க்குக் குறையாது 10 ரூபாய்க்கு மேற்படாது, நகர ஈட்டுப்படி வழங்க இப்போது அரசு முடிவு செய்துள்ளது. மதுரை நகர எல்லைகளுக்குள் பணியாற்றுகிற ஊராட்சி மன்றங்களின் பணியாளர்களும், மானிய உதவிபெறும் பள்ளிகளின் ஆசிரியர்களும், அதே வீதங்களில், நகர ஈட்டுப்படியின் நலன்களைப் பெறுவர். 1968 ஏப்ரல் 1-ம் நாளில் சேர வேண்டிய மார்ச் திங்கள் சம்பளத்திலிருந்து செயல்படவிருக்கிற இச் சலுகைகளின் காரணமாக, வருகிற ஆண்டில் ஏறக்குறைய 40 இலட்சம் ரூபாய் அளவுக்குப் பொறுப்புகள் கூடும். இதற்கேற்ப, 1968–69 ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதி வகை செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டின் திட்டம்.


14. பொதுக் கடன்களையும், இந்திய அரசுக்குச் சேர வேண்டிய கடன்களையும் திருப்பிச் செலுத்த வேண்டிய பொறுப்பு கணிசமாக உயர்ந்திருப்பதனாலும், அகவிலைப்படி வீதங்களை உயர்த்தியதால் ஏற்படும் முழு வினைவினாலும், நடப்பு ஆண்டைவிட அடுத்த ஆண்டில் திட்டத்திற்கான நிதி வசதிகள் பெரிதும் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. சிறுபாசனம், மீனளம், மின்சாரம் போன்ற திட்டங்களில் நடப்பாண்டில் செய்துள்ள



முதலீடுகள் பெரிதும் உயர்த்தப்பட்டுள்ளனவென்றும், இதனுல் நடப்பாண்டின் திட்ட முதலீடு, வரவு-செலவுத் திட்டத்தில் நாம் வகை செய்திருந்த 85 கோடியே 28 இலட்சம் ரூபாய்க்கு மாருக, 88 கோடியே 10 இலட்சம் ரூபாய் அளவிற்கு உயரும் என்பதை இவண் குறிப்பிட விரும்புகிறேன். மற்றும், இந்த ஆண்டில் மத்திய அரசு அளிக்கும் உதவியை, 38 கோடி ரூபாயிலிருந்து நாற்பத்து மூன்றரைக் கோடி ரூபாயாக உயர்த்த ஒப்புக்கொள்ளு மென்றும் நாம் எதிர்பார்த்தோம். ஆனுல் அந் நம்பிக்கை ஈடேறவில்லே. எனவே, நமது நிதி வசதியின் துணேகொண்டே, பெரியதொரு திட்டத்தைச் சரிக்கட்ட வேண்டி வந்தது.

பருவ நிலே யும் வேளா ண்மை விளேச்சலும்

15. மேற்சொன்ன காரணங்களால், நமது நிதி வசதி பெரிதும் குன்றியிருப்பதை நினேவிற்கொண்டு, அடுத்த ஆண்டுக்குரிய திட்டத்தை வகுக்கையில், மிக முக்கியமான துறைகளில், வளர்ச்சியின் விரைவு தணியாமல்—நியாயமான அளவில் நிறைவேறிவரும் வகையில் நாட்டம் செலுத்தியிருக்கிருேம். நடப் பாண்டில், குறிப்பாக மிகு பயன்தரும் தானிய ரகத் திட்டங்களிலும், ஒருபோக நிலங்களே இருபோக நிலங் களாக மாற்றும் திட்டங்களிலும் நாம் வேண்டிய அளவிற்கு வெற்றிபெற்றிருப்பதைக் கருதி, வேளாண்மை உற்பத்தி வேலேத் திட்டங்களுக்கும், அதனேடு இணேந்த வேலேத் திட்டங்களுக்கும் தொடர்ந்து நமது திட்டத்தில் சிறப்பளித்து வந்துள்ளோம். உணவு தானிய உற்பத்தியில் ஏற்பட்டுள்ள உயர்வு, நல்ல பருவநிலே காரணமாக மட்டும் ஏற்பட்ட உயர்வல்ல என்பதை நான் இங்கு வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். புள்ளிவிவரங் களேப் பாகுபடுத்திப் பார்த்ததிலிருந்து, நமது மாநிலம் முழுவதிலும் தென்மேற்குப் பருவ மழையினுல், முந்திய ஆண்டில் 416 மில்லிமீட்டர் மழையும், 1965–66-ல் 315 மில்லிமீட்டர் மழையும் பெய்ததற்கு மாருக, இவ்வாண்டு சராசரி 289 மில்லிமீட்டர் மழையே பெய்துள்ளது எனத் தெரிய வருகிறது. 1965–66-ம் ஆண்டில், நமது மாநிலத்தில் என்றுமே கண்டிராத அளவில் வறட்சி நிலே ஏற்பட்டது என்று





பொதுவாகக் கருதப்படுவதை இங்கே நினைவுறுத்த விரும்புகின்றேன். நடப்புப் பசலி ஆண்டில் பெய்த மழையின் அளவு, இதற்கு முந்திய ஆண்டுகளின் அளவைக் காட்டிலும் மிகக் குறைந்திருந்தது. இக் குறைவு, *1966—67-ம்* ஆண்டோடு ஒப்பிடும்போது, *30·5* சத விகிதமும், *1965—66-ம்* ஆண்டோடு ஒப்பிடும் போது *8·2* சத வீதமுமாக இருந்தது. இங்ஙனமே, வடகிழக்குப் பருவமழையும் பொய்த்துவிட்டது. *1966—67-ல் 606* மில்லி மீட்டர் மழை பெய்திருக்க, *1967—68-ல்* சராசரி *496* மில்லி மீட்டர் அளவிற்கே மழை பெய்துள்ளது. இதனுல் ஏற்பட்ட குறைவு, *18·1* சத விகிதமாகும். இவ்விரு மழைக் காலங்களையும் இணைத்துப் பார்த்தோமேயானுல், நடப்பாண்டின் மழை அளவு, *1966—67-ம்* ஆண்டின் மழை அளவைக் காட்டிலும் *23·1* சத விகிதம் குறைந்துள்ளது தெரிய வரும். இந்த இரண்டு பருவங்களிலும் ஆங்காங்கு பெய்த மழை அளவை மேலும் கூர்ந்து ஆய்வு செய்வோமானுல், பருவ மழை மேலும் பாதகமாயிருந்திருப்பதை அறியலாம். *1966—67-ல் 48* நாட்களும், *1965—66-ல் 41* நாட்களும் மழை பெய்திருக்க, நடப்பு வேளாண்மை ஆண்டில், மொத்தம் *39* நாட்கள் மட்டுமே மழை பொழிந்துள்ளது. வடகிழக்குப் பருவ மழையும், பயிர் வளரும் காலமும் இணைந்து செல்லும் இந்தக் கால அளவில், *1966—67-ல் 24* நாட்களும், *1965—66-ல் 22* நாட்களும் மழை பெய்திருக்க, நடப்பு வேளாண்மை ஆண்டில் *18* நாட்கள் மட்டுமே மழை பொழிந்துள்ளது. எனவே, பயிர்கள் வளரும் முக்கிய தருவாயில் பெய்த மழை அளவு, பெருமளவிற்குப் பற்ருக்குறையாகவே இருந்தது. பெரிய பாசன நீர்த் தேக்கங்களின் நீர் மட்டமும், நெஞ்சம் மகிழும் அளவிலே அவ்வளவு நிறைவு அளிப்பதாகவில்லை. இத்தகைய இடையூருன பருவ நிலைகள் வாய்த்தபோதிலும், நடப்பாண்டில் உணவு தானிய உற்பத்தி, *1966—67-ம்* ஆண்டின் உற்பத்திக்கு மேல் *2* இலட்சம் டன் உயர்ந்து, ஏறக்குறைய *60* இலட்சம் டன் அளவில் நிற்குமென்பது நமக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செய்தியாகும். நடப்பாண்டில்,

பொதுவாக 1965—66-க்கு நேர் என்று சொல்லத்தக்க பருவ நிலை அமைந்துள்ளது. அவ்வாறு 1965—66-உடன் ஒப்பிட்டு நோக்கின், நடப்பாண்டின் உற்பத்தி 7·4 லட்சம் டன் உயர்ந்திருக்கிறது. இந்த உற்பத்தி உயர்வு, நடப்பாண்டில் அரசு மேற்கொண்டுள்ள குறிப்பான திட்டங்களின் வாயிலாகக் கிட்டியுள்ள பலன்களை, முற்ற எடுத்துக் காட்டுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இவ்வாண்டில் மிகு பயன்தரும் தானிய ரகத் திட்டத்தின்கீழ் கிடைத்துள்ள பலன்களினால் ஊக்கமடைந்து, அத் திட்டத்தில், நெல் விளைச்சலின்கீழ் நடப்பாண்டில் இருந்த 13 லட்சம் ஏக்கர் பரப்பளவை, அடுத்த ஆண்டில் 25 லட்சம் ஏக்கர் அளவுக்கு உயர்த்த அரசு கருதுகிறது. இதைப் போலவே, இத் திட்டத்தின்கீழ், கலப்பின சிறு தானிய விளைச்சலின்கீழுள்ள நிலப் பரப்பும், நடப்பாண்டில் ஏறக்குறைய 1 லட்சம் ஏக்கராவிலிருந்து, அடுத்த ஆண்டில் 1·7 லட்சம் ஏக்கராவுக்கு உயர்த்தப்படும். மிகு பயன்தரும் தானிய ரகத் திட்டங்களின் வெற்றி, உர வகைகளை அதிகமாய்ப் பயன்படுத்துவதையே பெரிதும் பொறுத்துள்ளது. நடப்பாண்டில் உர வகைகள் வழங்கப்படும் நீர்மையிலிருந்து, அடுத்த ஆண்டு உர வகைகள் கிட்டும் நிலை எளிதாகுமென்று தெரிகிறது. இதற்கிணங்க, உர வகைகளைப் பயன்படுத்துவதை, நடப்பாண்டில் ஏறக்குறைய 1 லட்சம் டன் 'நைட்ரஜன்' அளவிலிருந்து, அடுத்த ஆண்டில் பெருமளவுக்கு உயர்த்தத் திட்டமிட்டிருக்கின்றோம். பருவநிலை பொய்க்காது, மிகு பயன்தரும் தானிய ரகங்களை மேலும் அதிகப் பரப்பளவில் பயன்படுத்தி, போதிய அளவில் உரமிட்டோமானால், அடுத்த ஆண்டில் உணவு தானிய உற்பத்தி பெருமளவிற்குப் பெருகும்.

ஏ.டி.டீ.27



நெல்




கோ 8



கேழ்வரகு


**சிறுபாசனத் திட்டங்களும் நிறுவன நிதி உதவியும்.**

16. மிகு பயன்தரும் தானிய வகைத் திட்டமும், பாசன வசதிகளைப் பெருக்கும் திட்டமும், ஒன்றோடொன்று இணைந்து செயல்படவேண்டுமென்றும், குறிப்பாக, ஒரு போக நன்செய் நிலங்களை இருபோக நன்செய் நிலங்களாக மாற்றுவதற்கு நாம் முனைந்து




செயல்பட வேண்டுமென்றும் அரசு உணர்கிறது. இதற்காக இறைவைப் பாசனத்திற்குரிய வசதிகளை விரிவுபடுத்த வேண்டியிருக்கும் இந்த நிலையில், கிணறுகள், துளைக் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இவற்றைத் தோண்டும் திட்டங்களும், விசை யேற்றங்களை நிறுவும் திட்டங்களும் சிறப்பான இடம் பெறுகின்றன. அதே நேரத்தில், இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதில், நிறுவனங்களின் வாயிலாகப் பெரு மளவில் நாம் கடன்கள் பெறலாமென்று திட்ட ஆணைக் குழுவும் சுட்டிக் காட்டியுள்ளது. ரிசர்வ் வங்கியும், ஆயுள் காப்புறுதிக்கழகமும், வர்த்தக வங்கிகளும், இப்போது வேளாண்மை உற்பத்தித் திட்டங்களுக்குப் பெருமளவில் கடன் வழங்க முன்வருகின்றன. ஆயினும், இந்த நிறுவனங்களிடமிருந்து பெறும் கடன் உதவி, கூட்டுறவுத் துறையின் மூலமாகவன்றி, அரசிற்கு நேரடியாகக் கிட்டாது. கடன் உதவும் நிறுவனங்களிட மிருந்து கிடைக்கிற உதவியில், நியாயமாகத் தனக்குள்ள பங்கை இந்த மாநிலம் இழந்துவிடக் கூடாதென்றும், குறிப்பாக, அத்தகைய உதவி, திட்டத்தை நிறை வேற்றுவதற்கு இந்திய அரசு வசதி செய்துதருகிற நிதிகளுக்குக் கூடுதலாக இருப்பதால், இத்தகைய நல்ல வாய்ப்பினை நழுவ விடக்கூடாது என்றும் அரசு கருதுகிறது. அடுத்த ஆண்டில் சிறு பாசனத் திட்டங் களுக்குக் கடன் வழங்கல் பற்றி, சில பெரிய கொள்கை முடிவுகளை நாம் எடுத்துள்ளோம். அரசு இப்போது முடிவு செய்துள்ள முறைப்படி, கிணறுகள் தோண்டு வதற்கும், விசையேற்றங்கள் அமைப்பதற்கும் வழங் கப்படுகிற புதிய கடன்கள், நில அடைமான வங்கிகளின் வாயிலாகவே கிடைக்கும். இதைப் போலவே, விரைவில், செவ்விய முறையில் செயல்படவிருக்கும் வேளாண்மைத் தொழிற் கழகம், விசையேற்றங்களையும் டிராக்டர் களையும் தவணைக் கொள்முதல் அடிப்படையில் வழங்கு வதற்குப் பொறுப்பேற்கும். திட்ட ஆணைக்குழுவுடன் நாங்கள் நடத்திய உரையாடல்களின்போது, சிறு பாசனத் திட்டங்களுக்காகவும் டிராக்டர்கள் தவணைக் கொள்முதல் திட்டங்களுக்காகவும், கடன் வழங்கும்

பற்பல நிறுவனங்களிடமிருந்து ஏறக்குறைய 6 கோடி ரூபாய் அளவுக்கு, நமது மாநிலத்திற்கு நிதி வசதி கிட்ட வகை செய்யப்படுமென்று நமக்கு அறிவிக்கப்பட்டது. இத்தகைய நிறுவனக் கடன் வசதியைப் பெற்றுக் கொள்ள, மத்திய நில அடைமான வங்கியின் கடன் ஈட்டுறுதி ஆவணங்களை (Debentures) வாங்குவதற் கென்று, 1968–69-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அரசு 2 கோடி ரூபாய் வகை செய்துள்ளது. அரசிடமிருந்து பெறும் இந்த உதவி உட்பட, மத்திய நில அடைமான வங்கி, அடுத்த ஆண்டில் தனது கடன் ஈட்டுறுதி ஆவணங்களின் மூலம் 8 கோடியே 70 இலட்சம் ரூபாய் அளவில் நிதி திரட்ட முடியுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் குறைந்தது, 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் சிறு பாசனத் திட்டங்களுக்காகப் பயன்படுத்த இயலும். மாநில அரசு, வேளாண்மைத் தொழிற் கழகத்தின் பங்கு மூலதனத் திற்குத் தொகை செலுத்துவதற்காகவும் 1968–69-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. இந்தக் கழகத்தின் பங்கு மூலதனத்திற்காக மத்திய அரசும் 50 இலட்சம் ரூபாய்க்குக் குறையாமல் தொகை செலுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே தவணைக் கொள்முதல் அடிப்படையில் விசையேற்றங்களை வழங்குவதற்காகக் குறைந்த அளவு 100 இலட்சம் ரூபாயும், டிராக்டர்கள் வழங்குவதற்காக 70 இலட்சம் ரூபாயும் ஒதுக்க இயலு மென்று கருதுகின்றோம். அதே நேரத்தில் நடப் பாண்டிலும் இதற்கு முந்திய ஆண்டுகளிலும் முதல் தவணைத் தொகை வழங்கப்பட்டுள்ள கிணறுகளுக்கான இரண்டாவதும் அதற்கு மேற்பட்ட கடன் தவணைத் தொகைகளையும் வழங்குவதற்கென, உதவித் தொகை நீங்கலாக, 250 இலட்சம் ரூபாய் அரசாங்கம் வகை செய்துள்ளது. எனவே, நில அடைமான வங்கிகளின் மூலமாகவும், வேளாண்மைத் தொழிற் கழகத்தின் வாயிலாகவும் கிட்டும்படிச் செய்துள்ள உதவித் தொகை உட்பட, உழவர்களுக்குக் கிடைக்கும் உதவித் தொகை எந்த வகையிலும் குன்றாது-குறையாது. அதற்கு





G.N.—7



மாறுக, சிறு பாசனத் திட்டங்களுக்கென உழவர் பெருமக்களுக்குக் கிடைக்கும் கடன் உதவி கணிசமான அளவிற்கு உயரும்.

17. நில அடைமான வங்கிகளின் வாயிலாகச் செயல்படவிருக்கிற இயல்பான இத்திட்டங்களைத் தவிர, ஒரே தொகுப்பாக உள்ள பகுதிகளில், குறிப்பாக, பெரிய பாசனத் திட்டங்களிலிருந்து பாசன வசதி பெறும் பகுதிகளில், ஒரு போக நிலங்களைப் பெருமளவில் இருபோக நிலங்களாக மாற்றுவதற்கு வசதியாயிருக்கும் பொருட்டு, சிறு பாசன வசதிகளை முனைந்து பெருக்குவதற்கான சில திட்டங்களையும் அரசு வரைந்துள்ளது. இத்திட்டங்கள், வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்திடமிருந்து சிறப்பு உதவி பெற்று நிறைவேற்றப்படும். புதுக்கோட்டைப் பகுதியில் மொத்தம் 92·5 இலட்சம் ரூபாய் முதலீடு செய்து, 2,000 கிணறுகளைத் தோண்டுவதற்கும் 500 விசையேற்றங்களை நிறுவுவதற்குமான ஒரு திட்டத்திற்கு, வேளாண்மை மறுகடன் உதவிக் கழகம் ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் பகுதியாக, அடுத்த ஆண்டில் 22·5 இலட்சம் ரூபாய்ச் செலவில் 500 கிணறுகள் தோண்டும் பணியும், 100 விசையேற்றங்கள் அமைக்கும் பணியும் நிறைவேற்ற இயலும். இவ்வாறே, கோவை மாவட்டத்தில், தொண்டாமுத்தூர், பெரியநாயக்கன் பாளையம் பகுதிகளில், மொத்தம் 168 இலட்சம் ரூபாய்ச் செலவில் 1,000 கிணறுகள் தோண்டுவதற்கும் 1,000 விசையேற்றங்கள் நிறுவுவதற்கும் வகை செய்துள்ள ஒரு திட்டத்திற்கு, ஏற்கனவே வேளாண்மை மறுகடன் உதவிக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்திற் கிணங்க, அடுத்த ஆண்டில் 42 இலட்சம் ரூபாய்ச் செலவில், 250 கிணறுகள் தோண்டும் பணியையும் 250 விசையேற்றங்கள் நிறுவும் பணியையும் செய்து முடிக்கக் கருதுகிறோம். இந்தத் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதிகளை மத்திய நில அடைமான வங்கி, சிறப்பு வளர்ச்சி ஈட்டுறுதி ஆவணங்களை வெளியிட்டுத் திரட்டும். இந்த

ஆவணங்களில் வேளாண்மை மறுகடன் உதவிக் கழகம் 75 சதவீதத்திற்கும், மாநில அரசாங்கம் எஞ்சிய 25 சதவீதத்திற்கும் முதலீடு செய்யும்.

18. வேளாண்மை மறு கடன் உதவிக் கழகத்திடமிருந்து பின்வரும் வேலைகளுக்காக உதவி பெறுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. (1) கோவை மாவட்டத்தில், அமராவதி நீர்த் தேக்கத் திட்டப் பகுதியில், 160 இலட்சம் ரூபாய்ச் செலவில் 2,000 கிணறுகளைத் தோண்டுதல், 2,000 விசையேற்றங்களை நிறுவுதல், (2) இராமநாதபுரம் மாவட்டத்தில், பெரியாறு விரிவுப் பகுதியில், 45 இலட்சம் ரூபாய்ச் செலவில் 900 கிணறுகளைத் தோண்டுதல், 900 விசையேற்றங்களை நிறுவுதல்; (3) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், புதிய கட்டளைக் கால்வாய், புள்ளம்பாடிக் கால்வாய்ப் பகுதிகளில், 165 இலட்சம் ரூபாய்ச் செலவில் 2,650 கிணறுகளைத் தோண்டுதல், 4,000 விசையேற்றங்களை நிறுவுதல்; (4) மதுரை, மேலூர் வட்டங்களில், 100 இலட்சம் ரூபாய்ச் செலவில் 2,000 கிணறுகளைத் தோண்டுதல், 2,000 விசையேற்றங்களை நிறுவுதல்; (5) தருமபுரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரி வட்டத்தில், 100 இலட்சம் ரூபாய்ச் செலவில், 2,000 கிணறுகள் தோண்டுதல்; 2,000 விசையேற்றங்களை நிறுவுதல். வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்தின் பிரதிநிதிகளுடன் நமது அலுவலர்கள் நடத்திய உரையாடல்களிலிருந்து, இத் திட்டங்களை அடுத்த நிதியாண்டில் நிறைவேற்றுவதற்கேற்ப, உரிய காலத்தில் கழகம் இசைவளிக்குமென நாம் எதிர்பார்க்கலாம். இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு, நில அடைமான வங்கிகளில் நிலவி வருகின்ற நடைமுறைகளும், மரபுகளும் பெருமளவில் சீராக்கப்படல் வேண்டுமென்பதை அரசு முற்றிலும் உணர்ந்து, அதற்கேற்ற நடவடிக்கைகளையும் தொடங்கிவிட்டது. இப்புதிய பொறுப்புக்களை மத்திய நில அடைமான வங்கி மேற்கொள்வதற்கிணங்க, அதற்குப் போதிய அளவில் நிர்வாகப் பணியாளர்களையும், தொழில் நுட்பப் பணியாளர்களையும் அரசு






கொடுத்து உதவும். இப்போது கருதியுள்ள அளவில், நிறுவனக் கடன் உதவித் திட்டம் தங்குதடையின்றிச் செவ்விய முறையில் செயல்படுகிறதாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக, மேற்சொன்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவது குறித்து, மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் கூர்ந்து நோக்கி வருவோம்.

நடுத்தரப் பாசனத் திட்டங்கள்.

19. நமது மாநிலத்தில் இன்னும் வாய்ப்புள்ள சில நடுத்தர பாசனத் திட்டங்களையும் மிக விரைவாக நிறைவேற்றி வருகின்றோம். 1968–69-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், இவ்வேலைத் திட்டங்களுக்காக 3 கோடியே 58 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளைப் போலவே, பாசனத் திட்டங்களுக்கான முதலீட்டின் பெரும் பகுதியை ஈர்த்துக் கொள்ளும் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்திற்கு, இவ்வாண்டு 2 கோடியே 6 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. இப்போது வகை செய்யப்பட்டிருக்கிற 95 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கத்துடன், சித்தாறு-பட்டினங்கால் திட்டத்தின் தற்போதைய விரைவு தளராது காக்கப்படும். அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 34 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்வதோடு, மணிமுத்தா நதித் திட்டத்தை அதன் இறுதி நிலைக்குக் கொண்டுவந்துவிடலாம். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இராமநதி-கடானா நீர்த்தேக்கத் திட்டங்கள் இரண்டிற்கும், இப்போது 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதால், அப்பணிகள் சுணக்கம் ஏதுமின்றி தொடங்கப்பெறும். 4 கோடி ரூபாய் அளவிற்கு மூலதனம் தேவைப்படுகின்ற வைகைக் கால்வாய்களின் அமைப்புகளைப் புதுப்பிப்பதற்கான திட்டத்தின் தொடக்கப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

நில அடிமட்ட நீர்வள ஆய்வு.


20. நமது மாநிலத்தில் புதிய-பெரிய பாசனத் திட்டங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பு மிகக் குறைவு என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். மேற்கொள்ளுவதற்கு ஏற்ற திட்டங்கள் என்று கருதப்படுகிற சில திட்டங்களும், அண்டை மாநிலங்களின்


இசைவைப் பொறுத்திருக்கின்றன. இவ்விசைவைப் பெறுவதற்கான காலமும் நீண்டுகொண்டே செல்லுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, பாலாற்றுப் பரப்பு, நெய்வேலிப் பகுதி, காவிரிக் கழிமுகம், சென்னை நகரைச் சூழ்ந்த பகுதிகள் போன்ற குறிப்பிட்ட பகுதிகளில், நில அடிமட்ட நீர்வளங்களை ஆய்வு செய்து முற்றிலும் பயன்படுத்துவதில் தனது முயற்சிகளைத் திருப்பவேண்டுமென்று சிறிது காலமாகவே அரசு உணர்ந்துள்ளது. ஐக்கிய நாடுகள் நிறுவனம் அனுப்பிய சிறப்பு ஆய்வுக் குழுவின் அறிக்கையை ஒட்டித் தீட்டிய திட்டமொன்று, 1966-ம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. தற்போதைய இத் திட்டத்தில், காவிரி கழிமுகப் பகுதியைக் குறித்துப் போதிய அளவில் ஆய்வு செய்யப்படவில்லையாதலால், அப்பகுதியில் நில அடிமட்ட நீர்வள ஆய்வினை மேலும் விரிவாக்குவதற்குக் கூடுதல் உதவியளிக்குமாறு, இந்திய அரசின் மூலம், ஐ.நா. நிறுவனத்தை இந்த அரசு அண்மையில் வேண்டிக்கொண்டுள்ளது. இத் திட்டத்தின் இரண்டாவது நிலையை முடிப்பதற்கு ஏறக்குறைய பதினெட்டு திங்களாகும். இப் பணி நிறைவேற, ஐ.நா. நிறுவனத்திற்கு 45 இலட்ச ரூபாயளவிலும், மாநில அரசிற்கு 48 இலட்ச ரூபாயளவிலும் செலவாகும். ஐ.நா. நிறுவனத்திலிருந்து வந்த குழு, அண்மையில் காவிரிக் கழிமுகப் பகுதிக்குச் சென்று, நாம் தெரிவித்த திட்டத்தைக் குறித்து நேரடியாக ஆய்வு செய்தது. நம்மால் குறிப்பிடப்பட்ட திட்டம், ஏற்றதென்றும் நிறைவேற்றக் கூடியதுதான் என்றும் தெரிவித்து, அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அக்குழுவினர் பரிவுரை செய்துள்ளார்கள். இத் திட்டப் பகுதிகளை, அயல்நாட்டுக் குழு ஒன்றின் துணைகொண்டு, விமானம் மூலம் ஆய்வு செய்வதற்காக, அரசு அண்மையில் 4·5 இலட்சம் ரூபாய் அளவிற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஐ.நா. வளர்ச்சித் திட்டக்குழு இந்த ஆய்விற்கு ஏற்பாடு செய்து வருகின்றது.





**இந்திய-ஜெர்மனித் திட்டம்.**

21. மூன்றாம் திட்டக் காலத்தில், உணவு முனையில் கிடைத்த நமது அனுபவம் காரணமாக, உணவு தானிய உற்பத்திப் பெருக்கத்தில் நமது நாட்டத்தைப் பெரிதும்









செலுத்தவேண்டியிருந்தாலும், உருளைக்கிழங்கு போன்ற துணைப் பயிர்களின் தேவையினை நாம் அடியோடு புறக்கணித்தல்கூடாது. ஜெர்மானிய கூட்டாட்சிக் குடியரசின் துணைகொண்டு, 1967-ம் ஆண்டின் தொடக்கத்தில், நீலகிரி மாவட்டத்தில் முனைப்பு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டதை இப் பேரவை அறியும். இத் திட்டத்தின்படி, நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு 'பின் கருகல் நோய்' (late blight) ஏற்படாவண்ணம், அதனைப் பேணிக் காப்பதற்குச் சிறப்பான நாட்டம் செலுத்தப்படும். இதைப் போன்றே, உருளைக்கிழங்கு விளைச்சலில் காணப்படுகிற பொன்னிற நூற்புழு (Golden Nematode) பரவாமல் தடுப்பதற்கும் ஆவன செய்யப்படும். கால்நடை வளர்ப்பு, கோழிப்பண்ணை, பாற்பண்ணைத் திட்டங்களின் வளர்ச்சியிலும் நாட்டம் செலுத்தப்படும். நமது பணியாளர்களுடன் இணைந்து செயலாற்றுவதற்கு, மேற்கு ஜெர்மனி வேளாண்மைத் துறை வல்லுநர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள் அடங்கிய 23 பேரை அனுப்புமென்று எதிர்பார்க்கப்படும் இத் திட்டத்திற்கு, 1968-69-ன் வரவு-செலவுத் திட்டத்தில், 22·2 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்திலுள்ள தேயிலைத் தோட்டங்களுக்கு, கூட்டுறவு நில அடைமான வங்கிகளின் மூலம் கடனுதவி அளிப்பதற்கும் அரசு ஒரு திட்டம் வகுத்துள்ளது. உதகமண்டலம், குன்னூர் வட்டங்களில் உள்ள கோத்தகிரி, குன்னூர், கீழ்க்கோத்தகிரி 'உள்வட்டங்கள்' (firkas) அடங்கிய ஓர் தொகுப்பான பகுதியில், 2,000 ஏக்கர் பரப்பளவில் தேயிலை முனைப்பாகப் பயிரிடப்படும். ஏக்கர் ஒன்றுக்கு 2,500 ரூபாய் வீதம் நில அடைமான வங்கிகள் கடனுதவி வழங்கும்; இக் கடன் 6 ஆண்டுக் காலம் கழித்து, 15 தவணைகளில் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும். மொத்தத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்படுகிற இத்திட்டத்திற்கு, சிறப்பு வளர்ச்சி ஈட்டுறுதி ஆவணங்கள் வாயிலாக நிதி எழுப்பப்படும். வேளாண்மை மறுகடன் உதவிக் கழகமும், மாநில அரசாங்கமும், 3:1 என்ற விகிதத்தில் இந்த ஆவணங்களில் முதலீடு செய்யும்.

# தமிழகத்தின்
# புகழ் ஒளி




உலகத் தமிழ் மாநாட்டின் நினைவுச் சின்னத்தினை, புது டெல்லியில், 15—3—68 அன்று, இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்களிடம், பாரத அரசாங்கத்தின் சுகாதாரம் –குடும்பக்கட்டுப்பாடு அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் டாக்டர் எஸ். சந்திரசேகர் அளித்தார். தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் இந்த நினைவுச் சின்னத்தை அனுப்பியிருந்தார்.

இந்திய-பிரான்ஸ் நட்புறவுத் திட்ட அடிப்படையில் நிறுவப்பட்ட டோரிஸ் திட்டத் துவக்கவிழா 31-1-68ல் நடைபெற்றது. அத்திட்டத்தின்கீழ் மீன்பிடிப்பதில் வல்லுநர்கள் அடங்கிய குழுவினர் நம் நாட்டு மீனவர்களுக்குப் பயிற்சி அளித்தனர். அப்பயிற்சி அளித்து முடிந்து தம் தாயகம் திரும்பும் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் பாராட்டி அவர்களுக்கு நன்றி கூறினார் (13—3—68)




ஜப்பான் நாட்டிலிருந்து வந்திருந்த மாணவர்கள் குழுவினருக்கு சென்னைக் கல்லூரிகள் மாணவ மன்றம், 17-2-68-ல் ஒரு வரவேற்பு அளித்தது. அவ்வமயம், ஜப்பான் நாட்டு மாணவர் குழுத்தலைவி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் பரிசுப்பொருள் மாணவர் கொடி ஒன்றினை வழங்கும் காட்சி.






2. நண்பகல் உணவுத்திட்டம் திறம்படவும் வெற்றிகரமாகவும் செயல்படுவதில் ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், மிகுந்த அக்கறை காட்டி வருகின்றன. தற்போது அரிசன நலப் பள்ளிகள், சென்னை மாநகராட்சிப் பள்ளிகள் உட்பட 30,000 பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இப்பள்ளிகளில் நண்பகல் உணவுபெறும் மாணவர்களின் எண்ணிக்கை 18·27 லட்சமாகும்.



4. "தரமான விதைகளை உழவர்களுக்கு வழங்குவது அரசின் நோக்கமாகும். 1966-67-ல் 354 டன் விதைகளும், 1967 டிசம்பர் 31-ம் தேதிவரையில் 356 டன் விதைகளும் வழங்கப்பட்டுள்ளன. 1968–69-ல் 506 டன் விதைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது."

# நல்வாழ்வுப் பணிகளில் நாட்டு மக்களின் ஈடுபாடு

சென்னை நேரு அரங்கில் 25–2–68-ல் நடைபெற்ற சிறு சேமிப்புக் கலைவிழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் உரையாற்றினர்.




25–2–68 அன்று நடைபெற்ற சிறுசேமிப்புக் கலைவிழாவில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் ஒன்று




## சிறு சேமிப்பு சிறந்தோங்குக!




1. குழந்தை நலன் ஒருங்கிணைப்புத் திட்டத்தின் கீழ் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தில், குழந்தைகளுக்கு பால் வழங்கப்படுகிறது.



3. "ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றினை ஏற்படுத்துவது அரசின் கொள்கையாகும். இதுவரையில் தமிழகத்தில் மொத்தம் 257 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன."

இலங்கையின் உள்துறை துணை அமைச்சர் திரு பெல்லக மாஜ தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் திரு சி. பா. ஆதித்தனாரைச் சந்தித்து உரையாடினர் (28—2—68).



# கல்லூரி தொடங்க, நன்கொடை




நாமக்கல்லில் நிறுவப்படவிருக்கும் கலைக்கல்லூரி நிதிக்காக 4051 ரூபாயினை, காத்தப்பள்ளி ஊராட்சி மன்றத் தலைவர் திரு குப்பண்ணக் கவுண்டர் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்களிடம் நன்கொடையாக அளித்தார் (10—3—68).

குடிசை வாழ்வோர் தீ விபத்து நிவாரண நிதிக்கு இறுதியாக ரூபாய் பத்தாயிரம் அளிக்கும் விழா, 24—3—68 அன்று சென்னை ராணி மேரி கல்லூரி தோட்டத்தில் நடைபெற்றது. நிவாரண நிதிக் குழுத் தலைவி மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், அவ்விழாவில் மாண்புமிகு முதலமைச்சரிடம், நன்கொடை அளிக்கிறார்.



22. அடுத்த ஆண்டுத் திட்டத்தை வகுக்கையில், நமது உணவு வளங்களுடன் இணைந்து நிறைவு செய்யும் வகையில் மீனளங்களை மேலும் ஆர்வத்தோடு வளர்ப்பதற்கான வழிவகைகளையும் கருத்திற்கொண்டுள்ளோம். மீனளங்கள் குறித்த வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கம் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டிருந்த 84·5 இலட்சம் ரூபாயிலிருந்து, திருத்த மதிப்பீடுகளில் 156·7 இலட்சம் ரூபாய்க்கு நடப்பு ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பெரும் எண்ணிக்கையில் விசைப் பொறிகள் பெறப்பட்டதன் காரணமாகவே, பெரும்பாலும் இம் முதலீடு உயர்ந்துள்ளது. இப்போது விசைப் பொறிகள் எளிதில் கிட்டுவதைக் கருதி, அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 200 விசைப்படகுகள் கட்டுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மீன் படகுகளை, விசைப் படகுகளாக மாற்றுவதில் கடந்த சில ஆண்டுகளில் சிறந்த முன்னேற்றம் எய்தியிருப்பினும், ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள, இதுகாறும் ஆர்வமுடன் எவ்வித முயற்சிகளிலும் ஈடுபடாமல் வாளாவிருந்தது, வருந்தத்தக்கதாகும். 36 இலட்சம் ரூபாய் மொத்தச் செலவில், நான்கு மீன் பிடி நாவாய்களை (Trawler) வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நாவாய்களை ஒப்படை செய்வதற்கு நீண்டகாலம் ஆகுமென்பதால், 1968–69-ல் ஒப்படை செய்வார்களென எதிர்பார்க்கப்படும் ஒரு நாவாய்க்கான செலவிற்காகவும், பிற்பட்ட ஆண்டுகளில் ஒப்படை செய்யவிருக்கும் எஞ்சிய நாவாய்களுக்கு முன்பணம் செலுத்துவதற்காகவும், 1968–69 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 10·35 இலட்சம் ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. அழகுற நீண்டு செல்லும் கடற்கரை அமைந்த தமிழ்நாட்டில், ஆழ்கடல் மீன்வளத்தை வெகுநாட்களுக்கு முன்பே பயன்படுத்தத் தலைப்பட்டிருக்க வேண்டும். மீனளம்







23. இவ்வண்ணமே, விலங்கின வளர்ப்பின் கீழும் தற்போதைய அளவில் செயல்கள் பேணி வரப்படும். விலங்கினங்களுக்கு மருத்துவ வசதிகளைப் பரவலாக விலங்கின வளர்ப்பு

ஏற்படுத்துவதில் அரசு மிக முக்கியத்துவம் அளிக்கின்றது. இதற்கேற்ப, வருகிற ஆண்டில் பற்பல கிராம நிலையங்களில், 50 கால்நடை மருந்தகங்களை நிறுவுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இதுதவிர, நமது கால்நடைச் செல்வத்தைப் பாதுகாக்கும் முயற்சியில், கோமாரி நோயினை அறவே ஒழிப்பது குறித்த புதிய வேலைத் திட்டத்துக்காகவும் 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.

**தொழில் வளர்ச்சி : தனியார் துறை.**

24. நமது பொருளாதாரத்தின் இன்றைய நிலையில், நமது ஆண்டுத் திட்டத்தில் வேளாண்மைத் துறையையும் அதனோடு இணைந்த துறைகளையும் வளர்ப்பதற்கான போதிய சிறப்பிடம் அளித்திருப்பது சாலப் பொருத்தமேயெனினும், மக்கள் தொகை நெருக்கமாகவுள்ள நமது மாநிலத்தைப் போன்ற ஒரு மாநிலத்தில், பெருந் தொழில்களையும் சிறு தொழில்களையும் வளர்க்க வேண்டிய தேவையையும் நாம் புறக்கணிக்க முடியாது. நமது தேசீயப் பொருளாதாரத்தில் பொதுவாக ஏற்பட்டுள்ள மந்தநிலை காரணமாக, புதிய தொழில்களை நிறுவுவதிலும், முன்பேயுள்ள தொழில்களை விரிவுபடுத்துவதிலும் நாடு முழுவதிலும் ஒரு சுணக்கம் ஏற்பட்டுள்ளதை உணரலாம். இவ்விதச் சூழலில், இம் மந்த நிலைக்குக் காரணமான சிக்கல்களைத் தீர்ப்பதிலேயே, இவ்வரசின் உடனடி நாட்டம் இயல்பாகவே சென்றது. பல நூறு தொழிலாளர்கள் வேலையிழக்காவண்ணம், நூற்பாலைகள் மூடப்படுவதைத் தவிர்க்க, அரசு உரிய காலத்தில் ஊக்கமுடன் மேற்கொண்ட நடவடிக்கைகளை இப்பேரவை பெரிதும் உணரும். விளைவு பெருகி, பண்டங்களின் விலைகள் உரிய அளவில் நின்றால், மக்களின் வாங்கும் திறன் பெரிதும் மேம்பாடு அடையும். அதன் விளைவாய், தொழில்துறை உற்பத்தியும் பல்கிப் பெருகுமென நாம் எதிர்பார்க்கலாம். மெல்லச் சீர்பட்டுவரும் இச்சூழலில், தனிப்பட்ட தொழில் முனைவர்கள் (entrepreneurs) நமது மாநிலத்தில் மீண்டும் பெருந்தொழில்களை நிறுவ ஆர்வமுடன் முன்வருகிறார்கள் என்பதை அறிய, அரசு களிப்படைகின்றது.









நமது மாநிலத்தில் பல்வகைச் செயற்கை நூல்களைத் (polyster fibre) தயாரிப்பதற்காக, ஏறக்குறைய 10 கோடி ரூபாய் மூலதன முதலீடு தேவைப்படுகிற தொழிற்சாலை யொன்றிற்கு, விரைவில் தனியார் துறைக்கு உரிமம் வழங் கப்படுமென இந்திய அரசிடமிருந்து அறிகின்றோம். மின்குறைவுக் கடத்திகள் (semi conductors), மண்வாரிக் கருவிகள் (earth moving equipment), கரிக் கருப்பு (carbon black), குழந்தை உணவு இவற்றைத் தயாரிப் பதற்கான தொழிற்சாலைகளை அமைப்பதற்கும், தொழில் முனைவர்கள் அரசிற்குச் செயற்குறிப்புகளை அனுப்பி யுள்ளனர். இச் செயற்குறிப்புகள் அனைத்தும் பற்பல நிலைகளில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இத் திட்டங்களை நிறைவேற்றி முடிக்க, தனது அதிகார வரம் பிற்குட்பட்ட அனைத்தையும் மாநில அரசு செய்யு மென்பதை, இப்பேரவை திண்ணமாய் நம்பலாமென்று இயம்ப விரும்புகின்றேன். நமது மாநிலத்தில் தொழிற் சாலைகளை நிறுவ முன்வரும் தனியார் தொழில் முனைவர் களுக்கு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம், தவணைக் கடன்கள் வடிவிலும், பங்கு மூலதனம் பெற உத்தரவாதம் அளிப்பதன் வாயிலாகவும் தொடர்ந்து உதவியளிப்பதற்கு வகை செய்யப்படும்.

மத்திய அரசினர் வேலைத் திட்டங்கள்.

25. பெருந்தொழில்களை வளர்ப்பதில் மத்திய அரசு செய்யும் பெரிய முதலீடுகளில் இம் மாநிலம் தனக்குரிய பங்கினைப் பெறும் முறையில், நமது மாநிலத்தில் சில பெரிய தொழிற் திட்டங்களை நிறுவும்படி இந்திய அரசினை நமது மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றது. மின்னணுக் கருவிகள் (Electronic Instruments) தயாரிப்பதற்கு, 10 கோடி ரூபாய் மூலதன முதலீடு தேவைப்படுகிற ஒரு தொழிற்சாலையை நிறுவுவது குறித்த, முக்கியமான ஒரு திட்டத்தைப்பற்றி, நான் இந்திய அரசிடம் நேரில் முறையிட்டிருக்கிறேன். இத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், தேர்ச்சி பெற்ற 3,500 தொழிலாளர்கட்கு வேலைவாய்ப்புக் கிட்டும். மத்தியப் பாதுகாப்பு அமைச்சரிடம் இது குறித்து நான் நேரில் செய்துகொண்ட முறையீடுகள் நல்ல பலனை





அளிக்குமென நம்புகின்றேன். ருமேனியா நாட்டின் உடனுழைப்புடன் நமது மாநிலத்தில், கனரகத் தகடுகள்—கொள்கலன்கள் தயாரிக்கும் தொழிற்சாலை (Heavy Plates and Vessels Plant) ஒன்றை நிறுவுமாறும் இந்திய அரசிற்கு வரைந்துள்ளோம். இத் தொழிற்சாலை, இரசாயனத் தொழிற்சாலைகளுக்கும், உர உற்பத்தித் திட்டங்களுக்கும், பாறையெண்ணெய்த் (Petroleum) தூய்மைத் தொழிற்சாலைகளுக்கும் தேவைப் படுகிற அழுத்தக் கொள்கலன்களையும், கருவிகளையும் தயாரிப்பதற்கு ஏற்றது. ஏறக்குறைய 10 கோடி ரூபாய் முதலீடு தேவைப்படுகின்ற இத் தொழிற்சாலையில், 2,000 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டும். பங்களூரிலுள்ள இந்தியத் தொலைபேசித் தொழிற் சாலையின் இரண்டாம் பிரிவு, நமது மாநிலத்திலே நிறுவப்படும் என்றும் அரசு எதிர்பார்க்கின்றது. இந்திய அரசும், திட்ட ஆணைக் குழுவும் முக்கியத்துவம் அளித்துவரும் கொள்கையான, ஒவ்வொரு பகுதியும் சமநிலை வளர்ச்சி அடைய வேண்டும் என்பது, நடை முறையில் பின்பற்றப்பட வேண்டுமானால், இப் பெரிய திட்டங்களை நிறுவுவது குறித்து, எங்களது வேண்டுகோள் ஏற்கப்பட்டாகவேண்டும். பெரிய தொழில்களை வளர்ச்சி செய்வதற்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு, மாநில அரசு தன்னாலியன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் மேற் கொள்ளும் என்று இந்திய அரசு உறுதியாய் நம்பலாம். அத்தகைய வசதிகளை உறுதிப்படுத்துவதற்காகவே, நடப்பு ஆண்டில், அரசு, இப்போது மணலியில் நிறுவப் பட்டு வருகிற சென்னை பாறையெண்ணெய்த் தூய்மைத் தொழிற் சாலைக்கு (Madras Refineries) ஏறக்குறைய 88 இலட்சம் ரூபாய்ச் செலவில் நீர் வழங்கும் திட்டம் ஒன்றுக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டத்திற் கென, 1968–69-ல் 36 இலட்சம் ரூபாய் வகை செய்யப் பட்டுள்ளது. 1969–70-ல் உற்பத்தித் தொடங்கு மென்று எதிர்பார்க்கப்படுகிற, சென்னை உரத் தொழிற் சாலைக்கு (Madras Fertilisers) நீர் வழங்குவதற்காக, ஏறக்குறைய 188 இலட்சம் ரூபாய்ச் செலவில் திட்டம்

ஒன்றை நிறைவேற்றுவது குறித்து, அரசு விரைவில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். சென்னைக்கு அண்மையில் பாறையெண்ணெய்த் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதால், இப்பகுதியில் பாறையெண்ணெய் இரசாயனத் தொழில்களின் இணைந்த வளர்ச்சிக்கு இனிய வாய்ப்புகள் ஏற்படும். எனவே, இப்பகுதியில் பாறையெண்ணெய் இரசாயனத் தொழில்களின் இணைந்த வளர்ச்சி குறித்து ஆய்வு செய்யும்படி, இந்திய அரசின் நிறுவனமான, '' எஞ்சினியர்ஸ் (இந்தியா) லிமிடெட் '' என்கிற நிறுவனத்தின் பணியை அரசாங்கம் வேண்டியுள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் துணைப் பொருள்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களைக் குறித்தும் ஆய்வு செய்து, ஓர் அறிக்கை அனுப்புமாறு அந்நிறுவனம் கேட்டுக் கொள்ளப்படும்.

தூத்துக்குடித் துறைமுகத் திட்டம்.

26. இந்த அரசின் வற்புறுத்தலுக்கிணங்கவும், கடந்த ஆண்டில் பொதுமக்களின் கிளர்ச்சிக்குச் செவிசாய்த்தும், இந்திய அரசு ஒருவாறு கடைசியில் தூத்துக்குடியிலே 24·40 கோடி ரூபாய்ச் செலவில், ஆழ்கடல் துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளதை, இப்பேரவையினர் முன்னரே அறிவர். இப்பணியை 1970-ம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்கும் வகையில், இந்திய அரசு, போதுமான அளவில் நிதி வசதிகளை ஒதுக்கித் தரும் என்று நம்புகிறோம். இத்துறைமுகம் செயலுக்கு வரும்போது, இப்பகுதியில் பல தொழில் திட்டங்களை நிறுவுவதற்கு வாய்ப்புகள் தோன்றும். இங்கே பரந்த நிலப் பகுதிகளைக் கையகப்படுத்துவதற்காகவும், நீர் வழங்குதல், மின்சாரம், சாலைகள் போன்ற மிகத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தந்து, புதிய தொழிற்கூடங்களை நிறுவுவதற்கு முன்வருகிற தொழில் முனைவர்களுக்கு அந்நிலங்களை ஒதுக்கித் தருவதற்காகவும், ஏற்கெனவே நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. இப்பகுதியில் இப்போது ஆய்விலுள்ள பற்பல திட்டவட்டமான செயற்குறிப்புகளில், இத்தாலிய நாட்டின் உடனுழைப்புடன் 6·4 இலட்சம் டன் அளவில் செறிமணி







மாநில அரசின் நேரடித் தொழிற் திட்டங்கள்.


உரவகைகளை (concentrated granular fertilisers) உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதும் ஒன்ருகும்.

27. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட, இரு பெரும் திட்டங்களான அரக்கோணம் தொடர் உருக்கு வார்ப்படத் தொழிற் சாலைத் திட்டமும், ஆலங்குளத்தில் சிமெண்ட் தொழிற் சாலைத் திட்டமும் நிறுவுவது குறித்த பணிகள், மன நிறைவு தரும் அளவிலே முன்னேறி வருகின்றன. இந்த இரு திட்டங்களுக்கும் நடப்பு ஆண்டில் செய்துள்ள முதலீடு 250 இலட்சம் ரூபாய் ஆகும். அடுத்த ஆண்டில் இவற்றிற்கென அதே அளவான 250 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கம், பணியின் வளர்ச்சியையொட்டி உயர்த்தப்பட வேண்டி யிருக்கும். இத்திட்டங்களுக்குத் தேவைப்படுகிற தொழில் நுட்பப் பணியாளர்கள், பணிக்கு எடுக்கப் பட்டு, குறிப்பாக சிமெண்ட் தொழிற்சாலை சம்பந்தமான பணி, மிகவிரைவாக முன்னேறி வருகிறது. சிமெண்ட் தொழிற்சாலை, 1968—69-ம் ஆண்டின் இறுதியிலோ, 1969—70-ம் ஆண்டின் தொடக்கத்திலோ உற்பத்தியைத் தொடங்கும். இயந்திரக் கருவிகள் தொழிற்சாலை ஒன்றையும், துணுக்கு இரும்புத் தொழிற்சாலை ஒன்றையும் (Sponge Iron Plant), இயந்திரக் கருவி துணைப் பகுதிகள் தொழிற்சாலை (Machine Tools Accessories Plant) ஒன்றையும் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் இக்கழகம் ஆய்வு செய்து வருகிறது. இயந்திரக் கருவிகள் திட்டத்தைப் பொறுத்தமட்டில், தொழில் உரிமம் ஒன்றை வழங்கும்படி இந்திய அரசுக்கு ஏற்கனவே வேண்டுகோள் அனுப்பப்பட்டுள்ளது. அவர்களின் ஒப்பளிப்பினை எதிர்பார்த்துக் காத்திருக்கிருேம். துணுக்கு இரும்புத் திட்டத்திற்கான தொழிற்சாலை இயந்திரங்களையும் கருவிகளையும் நமக்கு வழங்குவதற் கென, மேற்கு ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த ‘லூர்கி’ (Lurgi) நிறுவனத்துடன் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. இயந்திரக் கருவித் துணைப் பகுதி கள் தொழிற்சாலையை நிறுவுவதற்கு, பெங்களூரிலுள்ள

இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் தொழிற்சாலையினர், தமிழ்நாடு தொழில் நிதிக் கழகத்தின் அறிவுரையாளர்களாக (Consultants) இருக்க ஒப்புக்கொண்டுள்ளனர். அவர்களின் நிதி உதவியையும், உடனுழைப்பையும் பெறுவதற்கான வாய்ப்புகள் இப்போது ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. 1969–70-ம் ஆண்டிலிருந்து செயலுக்கு வரவிருக்கிற, புதிய நான்காம் திட்டத்தில் இடம் பெறும் வகையில், இத்திட்டங்கள் குறித்த முன்னேடிப் பணிகள் வருகிற ஆண்டில் நிறைவேற்றப்படும். சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய அரசுத்துறைத் திட்டங்களில், மற்றொரு திட்டம் திருமழிசையில் நிறுவப்பட்டுள்ள இயந்திர செங்கற் சூளைத் திட்டமாகும். இத் திட்டம் 1968 ஜனவரித் திங்களில், ஏறக்குறைய 70 இலட்சம் ரூபாய்ச் செலவில் செயல் படத் தொடங்கியுள்ளது. கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலைகளை நிறுவுவது குறித்தும் ஆர்வமுடன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்வதற்காக, 1968–69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 35 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே 15 இலட்சம் ரூபாய் அரசு முதலீடு செய்துள்ள தர்மபுரி ஆலையைத் தவிர, வட ஆர்க்காடு மாவட்டத்தில் இரண்டு ஆலைகளும், கோவை மாவட்டத்தில் ஒரு ஆலையும்—ஆக மேலும் மூன்று சர்க்கரை ஆலைகளை நிறுவ அரசு கருதுகிறது. இந்த மூன்று ஆலைகளுக்கும் உரிமங்கள் வழங்கும்படி இந்திய அரசினை அணுகியுள்ளோம்.




28. தொழிற்பேட்டைகளை நிறுவும் திட்டம் தளரா ஊக்கத்துடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது. கருவிகள் தயாரிக்கும் தொழில் (Instrument Industry), மின் அணுக் கருவிகள் தயாரிக்கும் தொழில் (Electronic Industry), மருந்துப் பொருள்கள் தயாரிக்கும் தொழில்—ஆகிய இத் தொழில்களுக்காக தனித் தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு நடப்பு ஆண்டில் வேலை தொடங்கப்பட்டுள்ளது. உதகமண்டலத்தில் இந்துஸ்தான் படச்சுருள்



தொழிற்சாலை சார்புள்ள தொழிற்பேட்டை ஒன்றை (Ancillary Industrial Estate) நிறுவுவதற்கும், கடலூரில் தொழிற்பேட்டை ஒன்றை நிறுவுவதற்கும், 1968—69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதி வகை செய்யப்பட்டுள்ளது.

கனிவளத்தைப் பயன்படுத்துதல்.

29. தொழில் வளர்ச்சி பெருக வேண்டுமானால், நமது மாநிலத்தின் கனிச் செல்வங்களை முனைந்து ஆய்வு செய்ய வேண்டுமென்று அரசு உணர்ந்துள்ளது. எனவே ஐ.நா. வளர்ச்சித் திட்டத்தின் சிறப்பு நிதியிலிருந்து கிடைக்கும் உதவியைப் பெற்று, கனிவள மேம்பாட்டினைக் குறித்த திட்டமொன்றிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதென்பதை அறிய இப்பேரவை பெரிதும் மகிழுமென்று நம்புகின்றேன். சேலம், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில், வேலூர், சேலம், விருத்தாசலம் இவற்றிற்கிடையே உள்ள பகுதிகளில், ஏறக்குறைய 14,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில், நவீன முறைகளில் விரிவாகவும் ஆழ்ந்தும் நிலவியல் ஆய்வு நடத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பகுதி முழுவதையும் விமானத்தில் காந்த மானியையும் (Magneto meter), காமா கதிர் ஒளிப் பிரிமானியையும் (Gamma Ray Spectrometer) வைத்து நிலவியல் நிழற்படம் எடுக்கவும், நிலவியல் கூறுகளை ஆய்வு செய்யவும் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஏறக்குறைய 10 இலட்சம் டாலர் (ரூபாய் 75 இலட்சம்) உதவித் தொகை வழங்க, ஐ.நா. நிறுவனம் இணங்கியுள்ளது. இதில் மாநில அரசின் பங்கு ஏறக்குறைய 35 இலட்சம் ரூபாயாகும். பற்பல நிலவியல் ஆய்வுத் துறைகளிலுள்ள அயல்நாட்டு வல்லுநர்களும், அறிவுரையாளர்களும், இப்பணியை நிறைவேற்றுவதற்கும் நமது பணியாளர்கட்குப் பயிற்சி அளிக்கவும் அனுப்பப்படுவர். துளைபோடும் வைரமுனைக் கருவிகளும், இரசாயன ஆய்வுக்கூடங்களுக்கும் உலோகக்கனிகளைப் பதப்படுத்தும் ஆய்வுக்கூடங்களுக்கும் நிலவியல் ஆய்விற்கும் முக்கிய வளர்ச்சிப் பணிகட்கும் தேவைப்படும் நுண்ணிய





கருவிகளும், இத்திட்டத்தின்கீழ் வகை செய்து தரப் படும். விமான மூலம் ஆய்வு நடத்தும் பணி ஏற்கனவே தொடங்கி நடந்து வருகிறது.

30. நமது மாநிலக் கனிவளங்களை ஆய்வு செய்வதில் இம் முயற்சிகளை மேலும் தொடர்ந்து நடத்திக் கொண்டு போவது அவசியமாயிருப்பது ஒருபுறமிருக்க, இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கனிவளங்களையும் பயன்படுத்திக்கொள்ள முடியாத நமது ஏலாமை வருத்தத்திற்குரிய ஒன்றாகும். கஞ்சமலை இரும்புக் கனி யையும், நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும் கொண்டு சேலத்தில் உருக்காலை ஒன்றினை நிறுவுவதற்கான திட்டம், தொழில்நுட்ப வகையிலும், பொருளாதார முறையிலும், ஏற்ற ஒரு சீரிய திட்டமென்று கடந்த பத்தாண்டுகளுக்கு மேல் நடத்திய ஆய்வுகளின் வாயிலாகவும், ஆராய்ச்சி களின் மூலமாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இதன் ஒவ்வொரு கட்டத்திலும், இந்திய அரசின் இணக்க மற்ற போக்கினால், இத்திட்டம் எவ்வாறு நிறைவேற்றப் படாமல் கட்டிப்போடப்பட்டுள்ளது என்பதை இப் பேரவையினர் அறிவர். நிதி வசதியின்மைதான், இத் திட்டத்திற்குத் தடையாய் நிற்கிறது என்று வாதிப் பதில் உண்மையில்லை; சற்று ஆழ்ந்து நோக்கின், இவ் வாதமும் பொருளற்ற வாதமென்பது புலனாகும். ஒரு துணைக் கண்டம் என்று சொல்லத்தக்க, விரிந்த, நமது இந்திய நாட்டில், பல்வேறு பகுதிகளில் சமநிலையில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்று, இந்திய அரசு ஓரளவிற் காவது உண்மையில் நம்பியிருந்தால், மலையொத்த பொகாரோ திட்டத்திற்கு வகை செய்துள்ள பெரும் நிதி ஒதுக்கத்தை, பொகாரோவில் நடுத்தர உருக் காலைத் திட்டம் ஒன்றையும், தென்னகத்திலே மூன்று உருக் காலைத் திட்டங்களையும் நிறுவுவதற்கு நன்கு பயன்படுத்தி யிருக்கலாம். உருக்காலைகளை நிர்வகிப்பதில் காணப் படும் கடும் சிக்கல்களை, நாட்டின் வெவ்வேறான பற்பல பகுதிகளில் நடுத்தர அளவு உருக்காலைகளை அமைப்பதன் மூலம் பெரிதும் தவிர்த்திருக்கலாம். சேலம் உருக் காலையும், நாட்டின் சிறப்புக் கலப்பு உருக்குத் தேவைகளை நிறைவேற்றியிருக்கும்.

சேலம் உருக்காலைத் திட்டம்.

மின்சாரத் திட்டங்கள்.


31. வேளாண்மை முன்னேற்றத்திற்கும், தொழில் முன்னேற்றத்திற்கும், மின்சாரத் திட்டங்களை ஊக்கமுடன் நிறைவேற்றி வருவது இன்றியமையாததென அரசாங்கம் உணர்ந்துள்ளது. மின்சாரத் திட்டங்களுக்காக, முதற்கண் 30·60 கோடி ரூபாயாக வகை செய்யப்பட்டிருந்த நிதி ஒதுக்கம், திருத்த மதிப்பீடுகளில் 33·66 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 1968–69-ம் ஆண்டுத் திட்டத்தில் 32·17 கோடி ரூபாய் ஒதுக்கப்படுவதால், திட்ட நிறைவேற்றத்தில் காணப்படும் தற்போதைய விரைவு, செம்மையாகப் பேணி வரப்படும். இந்த முதலீடும், அவ்வாண்டில் நிறைவேறி வரும் பணியின் முன்னேற்றத்தையொட்டியும், நமது நிதி நிலையையொட்டியும், மேலும் உயர்த்தப்பட வேண்டியிருக்கும். எண்ணூரில் அனல் மின் நிலையம் நிறுவும் பணி, அடுத்த ஆண்டில் மிக விறுவிறுப்பாக நடைபெறும். இதைக் கருத்திற்கொண்டு, இத் திட்டத்திற்கென 15 கோடி ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. கோதையாறு, பரம்பிக்குளம் நீர் மின்சாரத் திட்டங்களுக்கும் போதிய அளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் அடுத்த ஆண்டிலே 235 மெகவாட் நிறுவிய மின்சாரத் திறன் கூடுதலாகக் கிட்டும். இது தவிர, நெய்வேலி அனல் மின்சார நிலையத்தில், 100 கிலோவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட மற்றொரு இயந்திரப் பகுதி செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், அதன் மொத்த உற்பத்தித் திறன் 500 மெகவாட்டாக உயரும். 1968-ல் சாராவதி திட்டத்திலிருந்து, 300 மில்லியன் யூனிட்டுகள் அளவிற்கு மின்சக்தியை வாங்குவதற்கும், மைசூர் மாநிலத்துடன் உடன்பாடு செய்துகொண்டிருக்கிறோம். எனவே, வருகிற ஆண்டில் நமது மாநிலத்தில் கூடுதல் மின்சாரம் தேவையென்ற குரல் எங்கிருந்து கேட்கப்பட்டாலும், தமிழ்நாடு மின்சார வாரியம், அக்குரலுக்கு மதிப்புக் கொடுத்து, அதிக மின்சாரம் வழங்கும் நிலையில் இருக்கும் என்பதிலே ஐயமில்லை. நமக்குக் கிட்டும் நிதி வசதிக்குட்பட்டு, இந்த நிலையில் கிராம மின்சார வசதித் திட்டங்களுக்கு 6 கோடி ரூபாய் மட்டுமே, நம்மால் வகை செய்ய



முடிந்திருக்கிறது. 1965–66-லும், 1966–67-லும் இந்திய அரசு, கிராம மின்வசதித் திட்டங்களின் முக்கியத் துவத்தை உணர்ந்து, திட்டத்திற்குப் புறம்பாகச் சிறப்பு உதவி அளித்துள்ளது. உற்பத்தியைப் பெருக்குவதில் இறைவைப் பாசனத் திட்டங்கள் உடனடியாகப் பலன் தருகின்றன. எனவே இதனை மத்திய அரசு உணர்ந்து, அதற்கேற்ற கூடுதல் நிதி வசதியை அளிக்க முன்வர வேண்டும்.

32. நமது திட்டத்தில், சாலை அமைப்புகள் குறித்த பல்வேறு திட்டங்களுக்கு 160 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டிருப்பதால், இத்துறையின் தற்போதைய முன்னேற்றம், தடையின்றி பேணி வரப்படுவதற்கு உதவி யாக இருக்கும். இப்போது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள 300 மைல் நீளமுள்ள பேருந்துச் சாலைகளைப் பேணிவரும் பொறுப்பினை, அரசாங்கமே மேற்கொள்ளக் கருதுகின்றது; இதனால் ஊராட்சி ஒன்றி யங்களுக்கு உதவி கிட்டுவதோடு, குறைந்த முக்கியத் துவம் வாய்ந்த ஏனைய சாலைகளைப் பேணிவருவதில் அவை நாட்டம் செலுத்தவும் இயலும். கடந்த ஜூன் திங்களில் அறிவிக்கப்பட்ட அரசின் கொள்கை முடிவினை யொட்டி, பேருந்து வழித்தடங்களை நாட்டுடைமை யாக்கும் திட்டமும், போக்குவரத்து வசதிகளைப் பெருக்கும் வகையில் அமைந்துள்ளது. அரசின் போக்கு வரத்துத் துறையின் மூலதனச் செலவுகளுக்கென, 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப் பட்டுள்ளது. ஏனையவற்றோடு, அடுத்த ஆண்டு, குறித் துள்ள வண்ணம், 106 பேருந்து வழித்தடங்களை நாட் டுடைமையாக்குவதற்கும் இது வழிகோலும். நகராட்சி மன்றங்களின் நீண்டநாளைய வேண்டுகோளிற்கு இணங்கி, முதன்முறையாக, மாநகராட்சி மன்றம் நீங்கலான ஏனைய நகராட்சிகளில், சாலைகளைப் பேணி வருவதற்காக 7·5 இலட்சம் ரூபாய் சிறப்பு மானியம் ஒன்றை வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. சென்னை மாநகரில் சாலை களை மேம்பாடு செய்யவும், மேம்பாலங்கள் கட்டவும்,


சாலை, சாலைப் போக்குவரத்து




வருகிற ஆண்டில், மாநகராட்சிமன்றத்திற்குக் கடன்கள், மானியங்கள் வகையில் 47 இலட்சம் ரூபாய் அளவிற்குச் சிறப்பு உதவி வழங்கப்படும்.

கல்வி.

33. மத்திய, மாநில அரசுகளின் இடர்ப்பாடான நிதி நிலை காரணமாக, திட்ட ஆணைக் குழு, சமூகப் பணிகளுக்கு மிகக் குறைந்த அளவில் நிதி ஒதுக்கம் செய்யுமாறு பரிவுரை செய்திருப்பினும், இத்துறையின் வேலைத் திட்டங்களின் நியாயமான, குறைந்த அளவுத் தேவைகளுக்கு வகை செய்ய முயன்றுள்ளோம். பொறுப்பேற்கப்பட்ட செலவினம் உட்பட, 1968—69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், 'கல்வித்' தலைப் பின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை, 56 கோடியே 28 இலட்சம் ரூபாய் ஆகும். இத்தொகை, நமது மாநில வருவாயில் 23 சதவீதமாகும். ஊராட்சி ஒன்றியங்களுக்கு, நடப்பு ஆண்டில், அகவிலைப்படிக்கான மானியம் முன்கூட்டியே வழங்கப்பட்டது போன்ற சில கூறுகளை நீக்கிப் பார்த்தால், அடுத்த ஆண்டின் கல்விக்கான செலவினத்தின் நிகர உயர்வு, ஏறக்குறைய 6 கோடி ரூபாய் அளவில் அமைவதைக் காணலாம். இத்துறைக்குரிய ஆண்டுத் திட்டத்தில், 6 முதல் 11, 11 முதல் 14, 14 முதல் 17 வயதுத் தொகுதிகளில் உள்ள மாணவர்களைப் பள்ளியில் சேர்த்துக்கொள்ளுவதற்கு ஏற்ப, மொத்தத்தில் கூடுதலாக, 7,200 ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்துவதற்கு நியாயமான தொகை ஒதுக்க வேண்டியதன் தேவையைக் கருத்திற்கொண்டு, பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு 32 இலட்சம் ரூபாயும், அறிவியற் கருவிகளின் வகைக்காக 44 இலட்சம் ரூபாயும், அரசு ஒதுக்கியுள்ளது. தொடக்கக் கல்வி நமது மாநிலம் முழுவதிலும், இலவசமாகவும், கட்டாயமாகவும் ஏற்கெனவே அளிக்கப்பட்டு வருவதால், இத் துறையில் இப்போது அரசின் முயற்சிகள், கல்வியின் தரத்தை உயர்த்தும் பான்மையில் நெறிப்படுத்தப்படும். 1968—69-ல் 3,000 உயர்துவக்கத்தர (Higher Grade) ஆசிரியர் பதவிகள், இடைநிலைத்தர (Secondary Grade)







பதவிகளாக மாற்றப்படும். ஆசிரியர்கள் உயர்ந்த கல்வித் தகுதிகளைப்பெற்று, செவ்விய முறையில் மாணவர்களுக்குக் கல்வி புகட்ட, அவர்களுக்கு ஓரளவுக்கு ஊக்கமளித்திட வேண்டி, உயர்ந்த கல்வித் தகுதிகளைப் பெறுகின்ற ஆசிரியர்களுக்கு இரண்டு சம்பள உயர்வுகளை முன்கூட்டி அளிக்கும் ஒரு திட்டத்திற்கு அரசு ஏற்பளித்திருக்கிறது என்பதையும் அறிய இம்மாமன்றம் உவகை எய்துமென நினைக்கின்றேன். உயர்நிலைக் கல்வித் துறை பெரிதும் விரிவடைந்திருப்பதன் காரணமாக, கல்லூரிகளில் சேருவதற்கு மாணவர்கள் குவிந்தவண்ணமிருக்கின்றனர். இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்காக, புதிய கல்லூரிகளைத் திறப்பதன் மூலமாகவும், ஏற்கனவேயுள்ள கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதன் மூலமாகவும், அரசு முயற்சி எடுத்திருக்கிறது. புதிய கலைக் கல்லூரிகளைத் திறப்பதற்கு, பொது மக்கள் வழங்க வேண்டிய நன்கொடைத் தொகை பற்றி, அரசு விதித்துள்ள விதிமுறைகள் நிறைவேற்றப்படுகின்ற இடங்களில், 6 புதிய கலைக் கல்லூரிகளைத் திறப்பதற்கு, 1968–69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது. திருவண்ணாமலை, திண்டுக்கல், செய்யாறு ஆகிய இடங்களில் உள்ள கல்லூரிகளில், பட்டப் படிப்பு வகுப்புகளைத் திறப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நகரங்களில் புகுமுக வகுப்புகளில் சேர விழையும் மாணவர்களின் எண்ணிக்கை, அவ்வகுப்புக்களில் கிட்டும் இடங்களின் எண்ணிக்கையைவிட மிக அதிகமாயுள்ளது என்றும், 'முறை ஏற்பாட்டைச்' (Shift system) செயல்படுத்தினால், மேலும் ஏராளமான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வசதியாயிருக்கும் என்றும், நடைமுறை வாயிலாகத் தெரிய வருகிறது. ஏற்கனவே கல்லூரிகளிலுள்ள கட்டிட வசதிகளையும், ஆய்வுக்கூட வசதிகளையும் முழு அளவிற் பயன்படுத்திக் கொள்ள மேலும் இது வழிகோலும். நமது மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகங்களைக் கலந்து, கல்லூரிகளில் இம்முறை ஏற்பாட்டினைச் செயல்படுத்துவதைப்பற்றி அரசாங்கம் ஆய்வு செய்யக் கருதுகிறது. மதுரைப்

பல்கலைக் கழகத்துக்கான கட்டிட வேலையைத் தொடங்குவதென்றும் முடிவு செய்து, அதற்கென வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பத்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கலைக் கல்லூரிகளை விரிவுபடுத்துவதற்கு வேண்டிய, போதிய அளவு நிதி வசதிகளை வகை செய்யும் அதே வேளையில், மாணவர்களைத் தொழில் நுட்பக் கல்வியின்பால் திருப்பும் வண்ணம், அவர்களை ஊக்கப்படுத்த வேண்டியதன் தேவையையும் நாம் கருத்தில் இருத்தியுள்ளோம். கடந்த ஆண்டில், புகுமுகக் கல்லூரி வகுப்பு மாணவர்களுக்கு, சில வருவாய் வரம்புகளுக்குட்பட்டு, கல்லூரிச் சம்பளம் செலுத்துவதனின்றும் விலக்களிப்பது குறித்து நாம் எடுத்த முடிவிற்கிணங்க, புகுமுகக் கல்லூரி வகுப்பிற்கு நிகரென்று பல்கலைக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள பல்தொழிற் பள்ளிகளின் புகுமுகத் தொழில் நுட்ப வகுப்புகளுக்கும் (Pre-Technical Course), இச் சலுகையை விரிவுபடுத்த வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது. பல்தொழிற் பள்ளிகளில், புகுமுகக் கல்லூரி வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதைப் போலவே, அதே வருவாய் வரம்புகளுக்குட்பட்டு, புகுமுகத் தொழில் நுட்ப வகுப்பு மாணவர்களுக்கும் சம்பளம் செலுத்துவதினின்று விலக்களிக்க அரசு முடிவு செய்துள்ளதென்பதை அறிய, இம் மாமன்றம் களிப்படையும் என நம்புகின்றேன்.

பின்தங்கிய வகுப்பினர் நலன்.

34. பின்தங்கிய வகுப்பினர்களின் நலன், மாநில அரசின் நாட்டத்தில் சிறப்பாகத் தொடர்ந்து இருந்து வருகின்றது. 1968–69-ம் ஆண்டுத் திட்டத்தில், இத் தலைப்பின்கீழ் திட்ட ஆணைக் குழு 89 இலட்சம் ரூபாய் மட்டுமே ஒதுக்குமாறு பரிவுரை செய்திருப்பினும், இத் தலைப்பின்கீழ் உள்ள வேலைத் திட்டங்களின் குறைந்த அளவுத் தேவைகளை நிறைவேற்றும்பொருட்டு, அரசு 173 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கும் வகையில், திட்டம் ஒன்றினை வகுத்துள்ளது. பொறுப்பேற்றுக் கொண்ட செலவினத்தைச் சேர்த்து, அரிசனங்கள், பின்தங்கிய வகுப்பினர்கள் இவர்களின் நலனுக்காக, 6 கோடியே 51 இலட்சம் ரூபாய் அளவில், 1968–69-ம்




ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. உதவிச் சம்பளங்கள் வழங்குதல், வீட்டு மனைகளைக் கையகப்படுத்துதல் போன்ற தற்போதையத் திட்டங்களைத் தொடர்ந்து செயல் படுத்துவதைத் தவிர, அரிசனங்கள் புதிய தொழில் களிலும், வாணிபத்திலும் ஈடுபடுவதற்குத் துணையாக, அவர்களுக்குக் கடன்கள் வழங்கும் ஒரு திட்டத்தை வருகிற ஆண்டிலிருந்து அரசு தொடங்கி வைக்கக் கருது கிறது. இதற்கென ஒரு இலட்சம் ரூபாய் வகை செய்யப் பட்டுள்ளது. இத்திட்டத்தின் சாதனைகளை யொட்டி, இனி வருகிற ஆண்டுகளில் இது மேலும் விரிவுபடுத் தப்படும். அரிசன நலத்துறை நடத்தும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் எல்லாச் சிறுவர்களுக்கும், 3·8 இலட்சம் ரூபாய்ச் செலவில், ஒரு தொகுதி சீருடை வழங்க வேண்டும் என்றும், அரிசன மாணவர் விடுதி களில், ஒவ்வொரு மாணவருக்கும் உரிய விடுதிச் செலவை உயர்த்தித் தருவதற்காக 4·3 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு செய்வதற்கும், இப்போது அரசாங்கம் முடிவு செய்துள்ளது.



இலங்கை அகதிகள்.

35. விரைவில் பெருமளவில் தாயகம் திரும்பவிருக்கிற இலங்கை அகதிகள், இவ்வரசின் சிறப்பான நாட்டத்தை ஈர்க்கும் மற்றொரு மக்கட் தொகுதியினராவர். இந்திய அரசு, இலங்கை அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தப் படி, அடுத்த 15 ஆண்டுகளில், இந்திய நாட்டைச் சேர்ந்த 5 லட்சத்து 25 ஆயிரம் பேர் நம் நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இவர் களில் ஏறக்குறைய 10,000 குடும்பங்கள், 1968–69-ல் இங்கு வந்து சேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படு வதால், காலங் கடத்தாது இவர்களின் நலனிற்கும், மறு வாழ்விற்குமுரிய திட்டங்களைச் செவ்வனே தொடங்கி வைக்க வேண்டியுள்ளது. இவர்களில் பெரும்பாலோர் தோட்டத் தொழிலாளர்களாய் இருப்பதால், முக்கிய மாக தேயிலை, காப்பி, ரப்பர் தோட்டங்களிலும், நிலக் குடியேற்றத் திட்டங்களிலும்தான் இம்மக்களுக்கு மறு வாழ்வு அளிக்க வேண்டுமென்று அரசு கருதியுள்ளது.





இரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கு இணங்க, இந்த அகதிகளுக்கு மறு வாழ்வு அளிக்க வேண்டியுள்ளதால், இதனை நாம், நாட்டுக்குப் பொதுவான சிக்கலாகவே அணுக வேண்டும். இந்தக் கருத்தில்தான், இந்திய அரசு, திட்டத்திற்கென்று நமக்களிக்கிற இயல்பான உதவிக்குப் புறம்பாக, இவ்வகதிகளின் மறு வாழ்விற்கும், நலனிற்கும் தேவைப்படும் நிதிகளை முற்றிலும் வகை செய்தாக வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டோம். கடந்த சில திங்கள்களுக்குமுன், தென்னகத்திலுள்ள நான்கு மாநிலங்களுடன் கலந்து இந்திய அரசு சென்னையில் நடத்திய விவாதங்களின்போது, நமது கருத்தை இந்திய அரசு ஏற்றுக்கொண்டதென்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். நீலகிரி மாவட்டத்தில், 3,750 ஏக்கர் பரப்பளவில் மொத்தம் 3 கோடியே 75 இலட்சம் ரூபாய்ச் செலவில், தேயிலைத் தோட்டங்களை அமைப்பதற்கான ஒரு திட்டத்தை நாம் ஏற்கனவே இந்திய அரசின் இசைவிற்கு அனுப்பியுள்ளோம். வட ஆர்க்காடு மாவட்டத்தில், பூசிமலைக்குப்பத்தில் 330 ஏக்கர் பரப்பளவிலே, ஏறக்குறைய 10 லட்சம் ரூபாய்ச் செலவில் இந்த அகதிகளைக் குடியேற்றுவதற்கான ஒரு திட்டத்தையும் நாம் வகுத்துள்ளோம். அகதிகளின் திறமைக்கேற்ப, தொழில்களில் அவர்கள் ஈடுபடுவதற்கு வசதியாக, அவர்களுக்குக் கடன் வழங்கும் திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளன. மேலும், பற்பல திட்டங்களும் பல நிலைகளில் உருவாக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் அனைத்திற்கும் இந்திய அரசிடமிருந்து சிறப்புதவி பெற்று, அவற்றை முனைந்து செயல்படுத்தவில்லையென்றால், இவ்வகதிகளின் வருகையால் நமது மாநிலத்திலுள்ள வேலையின்மைச் சிக்கல் மேலும் சீர்கெடும் என்ற எனது கருத்தினை, இம்மாமன்றம் ஏற்றுக்கொள்ளுமென நம்புகிறேன்.

பொதுச் சுகாதாரம்.

36. மருத்துவம், சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு ஆகிய இந்தத் திட்டங்களின்கீழும், திட்ட ஆணைக் குழு 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கும்படி பரிந்துரைத்துள்ளது. எனினும், இத்துறையில்

3 கோடியே 69 இலட்சம் ரூபாய் அளவில் செலவு செய்ய முற்பட்டிருக்கிறோம். இத்துறையில் திட்ட வேலைகளுக்கு உரிய நிதி ஒதுக்கம், நடப்பாண்டில் 3 கோடியே 38 இலட்சம் ரூபாய் மட்டுமேயாகும் என்பதை நினைவிற் கொண்டால், இத்துறையில் நியாயமான அளவிற்கு வளர்ச்சி ஏற்பட உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்வார்களென நம்புகிறேன். செங்கற்பட்டு, பாளையங்கோட்டை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் வளர்ச்சி நிலையிலுள்ள மூன்று புதிய மருத்துவக் கல்லூரிகளுக்குக் கூடுதல் கட்டிடங்களைக் கட்டுவதும், கல்லூரித் தேவைப் பொருட்களுக்கு வகை செய்வதும் நமது நிதி வசதிகளின் முதற்பொறுப்பாக அமைய வேண்டுமென்பது வெளிப்படை, ஏனெனில், மருத்துவப் பணியாளர்களின் பயிற்சிக்கான வசதிகளை நாம் எந்த அளவில் வளர்த்துப் பெருக்கி வருகிறோமோ, அந்த அளவுதான் வருகிற ஆண்டுகளில் கிராமப் பகுதிகள் எங்கணும் மருத்துவ வசதிகளைப் பெருக்குவதற்கான திட்டத்தில் வெற்றி காண இயலும். எனவேதான், இம் மூன்று மருத்துவக் கல்லூரிகளுக்குமாகச் சேர்ந்து 77 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டக் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ள இத்துறை சம்பந்தமான இரண்டாம் பகுதித் திட்டங்களின் நீண்ட பட்டியலிலிருந்து, இம் மாநிலத்திலுள்ள கல்லூரிகளோடிணைந்த மருத்துவ மனைகள், மற்ற மருத்துவ மனைகள் போன்ற பற்பல மருத்துவ மனைகளில், கூடுதல் பணியாளர்கள், கருவிகள் இவற்றின் தேவைகளை ஒல்லும் வகையில் ஏற்றுக்கொள்ள நாங்கள் முயன்றுள்ளோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் காணலாம். திட்டத்திற்கான இயல்பான உதவிக்குப் புறம்பாக, 1 கோடியே 37 இலட்ச ரூபாய் மத்திய அரசு வழங்கும் உதவியின் துணை கொண்டு, மொத்தம் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் அளவில் நிதி ஒதுக்கம் செய்வதன் மூலம், குடும்பக் கட்டுப்பாடு திட்டங்கள் செயல்படும் விரைவு குன்றாது இருக்க நாம் முயற்சி எடுத்துள்ளோம். சித்த மருத்துவ முறையை வளர்ப்பது



குடும்பக் கட்டுப்பாடு
திட்டம் செயல்பட

மிகவும் சிறப்புடைத்தான ஒன்று என்று அரசு கருது கின்றது. அரும்பாக்கத்தில் நூறு படுக்கைகள் கொண்ட நாட்டு மருத்துவ மனையொன்றைக் கட்டுவதற்கு அண்மையில் அனுமதி வழங்கப்பட்டது. இதற் கான கட்டிடங்களைக் கட்டும் பணி விரைவில் மேற் கொள்ளப்படும். மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் அனைத்திலும் சித்த மருத்துவப் பிரிவுகளைத் திறப்பதற்கான செயற்குறிப்புகளும் அரசாங்கத்தின் ஆய்விலுள்ளன. பெரியம்மை, மலேரியா, யானைக்கால் போன்ற பிணிகளை அறவே ஒழிப்பதற்கான திட்டங்களைத் தொடர்ந்து நடத்துவதன் வாயிலாக, நோய்த் தடுப்புக் கூறுகளைப் பற்றிப் போதிய நாட்டம் செலுத்தப்படும். உலக சுகாதார நிறுவனத்தின் உடனுழைப்புடன், காஞ்சிபுரத்தில் புற்று நோய்க் கட்டுப்பாடு முன்னோடித் திட்டம் ஒன்றையும் விரைவில் தொடங்க அரசாங்கம் கருதுகின்றது. இந்தத் திட்டத்திற்குத் தேவைப்படும் கட்டிடங்களுக்கும் கருவிகளுக்கும் ஆகும் செலவை, உதவித் தொகையாக வழங்க, நார்வே அரசு அன்புடன் முன் வந்துள்ளது. இத்திட்டத்திற்கு விரைவில் இறுதி வடிவம் கொடுத்து இதனைச் செயல்படுத்த முற்படுவோம்.



நீர்வழங்கல், வடிகால் திட்டங்கள்.

37. சென்னை மாநகராட்சியின் நீர் வழங்கல், வடிகால் திட்டங்களை நிறைவேற்றும் வேகம், நடப்பு ஆண்டில் உள்ள அளவில் பேணி வரப்படும். ஆயினும், இத்திட்டங்களுக்காகும் செலவின் பெரும் பகுதியை மாநகராட்சி மன்றம், ஏனைய பெரிய மாநகராட்சி மன்றங்கள் பொதுக்கடன் எழுப்பி நிறை வேற்றி வருவதைப் போலவே, நிறைவேற்றி வர இயல வேண்டுமென்று அரசு கருதுகின்றது. அடுத்த ஆண்டில் நீர் வழங்கல், வடிகால் திட்டங்களுக்கு ஆகும் செலவில், 75 இலட்சம் ரூபாய் அளவிற்காவது மாநகராட்சி மன்றம் ஏற்க முடியும் என்கிற எண்ணத்தில், மாநகராட்சி மன்றத்தின் நீர் வழங்கல், வடிகால் திட்டங்களுக்காக, 1968–69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு களில், அதற்குக் கடன் உதவியும், மானிய உதவியும்

அளிப்பதற்கென 60 இலட்சம் ரூபாய் மட்டுமே ஒதுக்கப் பட்டுள்ளது. சென்னை மாநகரின் நீர் தட்டுப்பாட்டிற்கு நிலையான தீர்வு காண்பதற்காக, காவிரி நீரை வீராணத் திலிருந்து கொண்டுவருவதற்கான அரசாங்கத்தின் செயற்குறிப்பைப் பற்றி, இம் மாமன்றம் முன்னரே அறியும். இந்தத் திட்டத்திற்கான விரிவான மதிப் பீடுகள், இப்போது தயாரிக்கப்பட்டுள்ளன. 5 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, இந்திய அரசின் தொழில் நுட்ப இசைவினையும், நிதி பற்றிய இசைவினையும் முன்கூட்டியே பெறுதல் வேண்டும் என்ற மத்திய அரசின் நெறிமுறைக்கிணங்க, இந்த மதிப் பீடுகள், இந்திய அரசின் முறையான இசைவினைப் பெறு வதற்காக அனுப்பப்பட்டுள்ளன. வருகிற ஆண்டில் இத்திட்டத்தை நாம் ஆர்வமுடன் தொடங்கும் வகையில், இத்திட்டத்திற்கான இசைவினை, இந்திய அரசு விரைவில் வழங்குமென்று நம்புகிறோம். இத்திட்டத்திற்காக, இந்நிலையில் 25 இலட்சம் ரூபாய் வகை செய்யப் பட்டுள்ளது. 1969-70-ல் செயல்படவிருக்கிற புதிய நான்காம் திட்டத்தில், இதை நிறைவேற்றி முடிக்க மிக முதன்மை இடம் அளிக்கப்படும். 1968-69-ம் ஆண்டுத் திட்டத்தில், ஏனைய நகரங்களுக்கான நீர்வழங்கல், வடிகால் திட்டங்களுக்கு வகை செய்யப்பட்டுள்ள 125 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கத்தை, நடப்பு ஆண்டின் 155 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சிறியதாகத் தோன்றினாலும், மாநகராட்சி மன்றத்தின் நீர்வழங்கும் திட்டங்கள் உட்பட, 120 இலட்சம் ரூபாய் முதலீடு செய்வதற்கான திட்டங்களை மட்டுமே திட்ட ஆணைக்குழு ஏற்றுக் கொண்டுள்ளது என்பதை, உங்கள் நினைவிற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். மிக முன்னேறிய நிலையில் உள்ள திட்டங்களை நிறைவு செய்தால், நெடுங்காலமாக சுணங்கிக் கிடந்த அத்திட்டங்கள் விரைவில் நிறை வேற்றப்பட்டு, அவற்றின் பலன்களை மக்கள் துய்க்க முடியும் என்கிற கருத்தில், அத் திட்டங்களை நிறை வேற்றி முடிப்பதில் போதிய நாட்டம் செலுத்தப் படும். ஆவடி, வந்தவாசி, திண்டுக்கல், ஏர்க்காடு,






நாமக்கல், வில்லிவாக்கம் ஆகிய இடங்களில் நீர் வழங்கல் குறித்த திட்டங்களும், மன்னார்குடி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் வடிகால் திட்டங்களும் அடுத்த நிதி ஆண்டில் நிறைவேறிவிடும் என்று தெரிகிறது.

ஆண்டுத திட்டம். 1968-69.

38. எனவே, 1968–69-ம் ஆண்டில் செயல்படுத்து வதற்காக, 79 கோடியே 68 இலட்ச ரூபாய் அளவில் திட்டம் ஒன்றை வகுத்துள்ளோம். நடப்பு ஆண்டில் நாம் எதிர்பார்க்கக்கூடிய சாதனையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இத்திட்டம் பார்வைக்கு சிறியதாகத் தோன்றினாலும், நடப்பு ஆண்டிலும், அதற்கு அடுத்த ஆண்டிலும் வளர்ச்சித் திட்டங்களின் அளவுகளை சீர்தூக்கிப் பார்ப்பதற்கு, இதற்குமுன் நான் குறிப்பிட்டுள்ளவாறு, நிறுவனங்களிடமிருந்து பெறுகிற கடன் வசதிகளைக் கொண்டு, திட்டத்திற்குப் புறம்பாக வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி வசதி வழங்கக் கருதியிருப்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும். முறைப்படி கணக்கில் எடுத்துக்கொள்ளப் பட வேண்டிய இந்த நிதி வசதிகளும் சேர்க்கப்பட்டால், வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்படும் விரைவு தணியாமல், ஏறக்குறைய நடப்பு ஆண்டில் இருந்த அளவில் காக்கப்பட்டுவருமென்பதை இம் மாமன்றத் தினர் உணர்வார்களென நம்புகின்றேன். திட்டத்தின் வடிவத்தை முடிவுசெய்வதில், மத்திய உதவி எப்போதுமே முதன்மையான பங்கு வகிக்கிறது என்பதையும் இம் மாமன்றம் அறியும். உதவித் தொகையில் உரிய பங்கு நமக்கு வழங்கப்படாததும், 1966–67-லும் 1967–68-லும் ஒப்புக்கொண்ட உதவித் தொகையும் விகிதப்படி வழங்கப்படாததும், நமக்கு மனக் குறை அளித்துள்ளன என்பதை எனது உரையில் முன்னரே நான் குறிப்பிட்டுள்ளேன். இந்த இரண் டாண்டுகளில் ஏற்பட்ட குறைவினை முழுமையாக நிறைவு செய்வதுடன், பல பாசனத் திட்டங்களும், மின்சாரத் திட்டங்களும் இப்போது மிக வளர்ச்சி பெற்ற நிலையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதைக் கருதி,

தன்னுல் இயன்ருல், மேலும் அதிக உதவி அளிக்கும் ஏற்பாட்டிற்கு வகை செய்யுமளவிற்காவது, திட்ட ஆணைக் குழு செயல்பட வேண்டும். திட்டத்திற்காக 47·90 கோடி ரூபாய் மத்திய உதவி கிடைக்கும் என்ற நிலையில், நமது வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்துள்ளோம். மத்திய அரசு 42 கோடியே 90 இலட்ச ரூபாயளவிற்கே உதவி தருவதாக உறுதியாக அறிவித்திருந்தபோதிலும், மேற்குறிப்பிட்ட அளவில் உதவி பெற நமக்கு உரிமையுண்டு என்றும் நாம் கருதுகிருேம்.

**1967–68 திருத்த மதிப்பீடுகள்.**

39. தற்போதைய வரவு-செலவுத் திட்டச் செயற் குறிப்புகளில், பொருத்தமான சில அடிப்படைப் புள்ளி விவரங்களை இப்போது ஆராய விரும்புகின்றேன். கடந்த ஜூன் திங்களில் நான் இப்பேரவையின் முன் வைத்த, 1967–68-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப் பீடுகளில், நடைமுறைக் கணக்கில் 1 கோடியே 12 இலட்சம் ரூபாய் துண்டு விழும் என்று எதிர்பார்ப்பதாக இயம்பினேன். உணவு தானிய விற்பனையின் மீது வழங் கப்படும் உதவித் தொகைக்கான நிதி ஒதுக்கம், அப்போது "124—உணவுத் தானியங்களில் அரசு வாணிபம்" என்கிற மூலதனத் தலைப்பின்கீழ் வகை செய்யப் பட்டிருந்தது. அது, இப்போது வரவு-செலவுத் திட்ட மரபுகளைப் பின்பற்றி, நடைமுறைக் கணக்குக்கு மாற்றி எழுதப்பட்டுள்ளது. இதனுல், நடைமுறைக் கணக்கில் செலவினம் 5 கோடியே 10 இலட்சம் ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது. இவ்வாறு இருப்பினும், நடப்பு ஆண்டில் நடைமுறை வரவினங்கள் 227 கோடியே 95 இலட்சம் ரூபாயாகவும், நடைமுறைச் செலவினங்கள் 228 கோடியே 40 இலட்சம் ரூபாயாகவும் நிற்கின்றன என்பதையும், இதன் காரணமாக நடைமுறைக் கணக்கில் 45 இலட்சம் ரூபாய் மட்டுமே துண்டு விழுகிறது என்பதையும் அறிய, இப்பேரவையினர் களிப்படை வார்கள் என்று நினைக்கின்றேன். கடந்த ஆண்டில், இம் மாமன்றத்தின் முன்னர் வைக்கப்பட்ட, கூடுதல் வரி விதிப்புச் செயற் குறிப்புகளின் மூலம் கிட்டுமென நாம்










மொத்தமாகக் கணக்கில் எடுத்துக்கொண்ட 5 கோடியே 25 இலட்சம் ரூபாய், இப்போது வண்டிகளின் மீதான வரிகள், விற்பனை வரி, ஆயத் தீர்வைகள் போன்ற பொருத்தமான தலைப்புகளின்கீழ் பிரித்துக் காட்டப் பட்டுள்ளன. அவற்றிலிருந்து கூடுதல் வரி விதிப்பின் மூலம் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்த்த வர வினங்கள், பெரும்பாலும் எய்தப்பட்டிருப்பதைக் காணலாம். வருமான வரியில் நமது பங்குத் தொகை 2 கோடியே 63 இலட்சம் ரூபாயளவிற்கும், சொத்துரிமை வரியின் (Estate Duty) கீழ் 44 இலட்சம் ரூபாயளவிற்கும் வரவினம் பெருகியுள்ளது. முந்திய ஆண்டுகளுக்குரிய நிலுவைத் தொகைகள் செலுத்தப்பட்டமையால், பெரும்பாலும் இந்த வருவாய் உயர்வு ஏற்பட்டு உள்ளது. ஆயினும், மத்திய ஆயத் தீர்வையின்கீழ் 1 கோடியே 39 இலட்சம் ரூபாய்க்கு வரவினம் குறைந்ததன்மூலம், இது ஓரளவுக்குச் சரிக்கட்டப்பட்டுள்ளது. இந்த மூன்று வரவினங்களையும் ஒன்றாக எடுத்துக்கொண்டு, வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, திருத்த மதிப்பீடுகளில், மத்திய வரிகளில் நமது பங்கின்கீழ் மொத்தத்தில் 1 கோடியே 68 இலட்ச ரூபாய் அளவில் வருவாய் உயர்ந்துள்ளது. நடப்பு ஆண்டுத் திட்டத்திற்குரிய தனது உதவித் தொகையான 38 கோடி ரூபாயை உயர்த்த மத்திய அரசு ஒப்புக்கொள்ள வில்லை யெனினும், நாம் மதிப்பீடு செய்ததைவிட அவ் வுதவியின்கண் அடங்கிய மானியத் தொகை உயர்ந்துள்ள தால், நடைமுறை வரவினம் 1 கோடியே 45 இலட்ச ரூபாயளவில் மேம்பாடு அடைந்திருக்கிறது. வரியின்பாற் படாத வரவினங்களிலும் (non-tax revenues) குறிப்பாக, அரசினர் கடன்கள் மீதான வட்டியின் கீழும், வரவினம் உயர்ந்திருக்கிறது.

40. முந்திய ஆண்டுகளைப் போலவே, திருத்த மதிப் பீடுகள் தயாரிக்கப்படும்போது, நமது செலவினங்கள் முதற்கண் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வகை செய்திருந்த செலவினங்களைக் காட்டிலும் உயர்ந் துள்ளன. திருத்த மதிப்பீடுகளில் காணும் இச் செலவின

உயர்வு, சில நாட்களுக்கு முன் இப்பேரவையின் முன் வைக்கப்பட்ட முதல் துணை மதிப்பீடுகளில் ஏற்கனவே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. உணவு உதவித் தொகையான 5 கோடியே 10 இலட்சம் ரூபாயை, நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்டதனுல் பெரும் உயர்வு ஏற்பட்டுள்ள வழக்க மீறிய செலவுகளின் (Extraordinary Charges) கீழ் 5 கோடியே 46 இலட்சமும், காவல் துறையின்கீழ் 149 இலட்சமும், கல்பாக்கத்தில் அணுமின் நிலையத்திற்குத் தேவைப்படும் நிலங்களேக் கையகப்படுத்தியதற்கு 23 இலட்சம் ரூபாய் செலவினம் உயர்ந்ததன் காரணமாக உயர்ந்துள்ள பொது நிர்வாகத்தின்கீழ் 46 இலட்சமும், மருத்துவத்தின்கீழ் 62 இலட்சமுமாக, செலவின உயர்வுகள் முக்கியமாக ஏற்பட்டுள்ளன. கல்வி, சமுதாய வளர்ச்சி போன்ற சில தலேப்புக்களின்கீழ் வேலேத் திட்டங்களுக்கு, திட்டஆணேக் குழு மிகக் குறைந்த அளவில் நிதி ஒதுக்கம் செய்ததையொட்டி, வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்திருந்த செலவினத்தைக் காட்டிலும் ஓரளவு குறைந்த அளவில் செலவினத்தை நாம் நிறுத்த வேண்டியிருந்தது. நடைமுறைக் கணக்கில் ஏற்பட்ட ஏனைய முக்கியமான செலவின உயர்வுகளும், பெரும்பாலும் வளர்ச்சித் தலேப்புக்களின் கீழேயே ஏற்பட்டுள்ளன.






41. மூலதனக் கணக்கில் ஏற்பட்ட செலவினங்களேயெடுத்துக்கொண்டால், மத்திய நில அடைமான வங்கியின் கடன் ஈட்டுறுதி ஆவணங்களில் 134 இலட்ச ரூபாயும், மணலியில் பாறை எண்ணெய்த் தூய்மைத் தொழிற்சாலேக்கு நீர் வழங்குவதற்கான திட்டத்திற்கு 40 இலட்சம் ரூபாயும், மண்டபத்தில் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடங்களே வாங்குவதற்கு 19 இலட்சம் ரூபாயும் முதலீடு செய்வதற்கு இப்போது வகை செய்துள்ளோம். சிறு பாசன வேலேகளுக்கான முதலீட்டையும் 21 இலட்சம் ரூபாய் அளவில் உயர்த்தியிருக்கிறோம், 'கடன்கள்', 'முன்பணத் தொகை' களின்கீழ் குடியானவர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் (19 இலட்ச ரூபாய்),

மும்முர உரமிடும் திட்டத்திற்கான கடன்கள் (50 இலட்ச ரூபாய்), தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கப் படும் கடன்கள் (377 இலட்ச ரூபாய்) ஆகிய தலைப்புக் களின்கீழ், முதலீடுகள் குறிப்பாக உயர்த்தப்பட்டுள்ளன. மூலதன, கடன் கணக்குகளில் ஏற்பட்டுள்ள இச் செல வின உயர்வுகள், 'நிதியிடாக் கடன்-வைப்புத் தொகை' (Unfunded Debt-Deposits) தலைப்புக்களில் உயர்வு காணப்பட்டதால், தேவைக்கு மேலாகவே சரிக்கட்டப் பட்டன. உரவகை வாணிபங்களுக்குக் கடனுதவி அளிப்பதற்காக இந்திய அரசிடமிருந்து பெறப்படும் கடன்களைப் பொறுத்தவரையில், தற்காலிகமாக ஓரளவுக்கு மேம்பாடு ஏற்பட்டது. திட்டத்திற்காக மத்திய அரசிடமிருந்து பெறுவோம் என்று, நாம் முதற் கண் எதிர்பார்த்திருந்த கூடுதல் உதவித் தொகை கிட்டாமற் போனாலும், 'வைப்புத் தொகை'-'கடன்' தலைப்புக்களின்கீழ் ஏற்பட்ட இந்த மேம்பாடுகளின் காரணமாக, முதற்கண் வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்த 85·28 கோடி ரூபாய் அளவைவிட உயர்ந்து, இப்போது 88·10 கோடி ரூபாய் அளவில் வந்துள்ள திட்டத்திற்கு நிதி வகை செய்யவும், அதே நேரத்தில் முன்பு நாம் எதிர்பார்த்த 495 இலட்சம் ரூபாய் அளவிற்கு மாறாக, ரிசர்வ் வங்கியில் அனுமதி பெற்ற வழிவகை முன்பண வகையில், 295 இலட்சம் ரூபாய் மட்டுமே நிலுவையாக உள்ள நிலையில், இந்த ஆண்டுக் கணக்கினை முடிக்கவும் நம்மால் இயன்றது. இன்றைய நமது மதிப்பீடுகளின்படி, இம் மாநிலம், இந்த நிதி ஆண்டின் இறுதியில் இந்திய ரிசர்வ் வங்கியிடம் அதிகப் பற்று வாங்கும் நிலையில் இராது என்பதையறிய இம் மாமன்றம் இறும்பூதெய்துமென்று நம்புகின்றேன்.


1968-69 வரவு-செலவுத் திட்டம்.

42. 1968–69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில், வண்டிகள் வரி, விற்பனை வரி, மின்சார வரிகள் போன்ற நீட்சித் திறனுள்ள வருவாய் வழிகள் அனைத்தின் கீழும் இயல்பான வளர்ச்சிக்கு வகை செய்த பின்னர், நடைமுறைக் கணக்கில், நமது வரவினம் 248·28 கோடி ரூபாய் என்றும், செலவினம் 247·54 கோடி ரூபாய் என்றும், இதனால் 74 இலட்சம் ரூபாய் உபரி



ஏற்படும் என்றும் மதிப்பிடப்படுகின்றது. உணவு தானிய விற்பனையின்மீது உதவித் தொகை வழங்கும் திட்டம் இப்போது செயல்பட்டு வருகின்ற பகுதிகளில், அந்த உதவித் தொகைக்காக, 7 கோடியே 24 இலட்சம் ரூபாய்க்கு வகை செய்த பின்னரும், இந்த உபரி கிட்டியுள்ளது. நகர ஈட்டுப்படி வழங்கும் திட்டத்தை, சென்னை மாநகரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும், மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும், மதுரை நகரத்திற்கும் இப்போது விரிவுபடுத்தியுள்ளதால், 40 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினத்தையும், முன்பே நகர ஈட்டுப்படியின்கீழ் அளிக்கப்பட்டுள்ள 75 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினத்தையும், கடந்த நவம்பர் திங்களில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட அகவிலைப்படி வீதங்களில் ஏற்பட்ட உயர்வினையும், இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் முற்றிலும் எதிரொலிக்கின்றன. அகவிலைப்படி உயர்வின் விளைவாக ஏற்படுகிற செலவினம் 9·2 கோடி ரூபாய் ஆகும். அதில் 2·3 கோடி ரூபாய், பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.




அரசினர் பரிசுச் சீட்டுத் திட்டம்.

43. நடைமுறைக் கணக்கைப் பொறுத்தவரையில், நமது நிதி நிலை கவலை தராதிருப்பினும், வருகிற ஆண்டில், இந்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்களும், வெளிச்சந்தைக் கடன்களும் ஏராளமாகப் பெருகியிருப்பதால், அடுத்த ஆண்டில் நமது வழிவகை நிதி நிலை பெரிதும் இடர்ப்பாடு மிகுந்ததாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு விழிப்புடன் இருக்கவேண்டும். ஆகவே, பொருளாதார வளர்ச்சி காண்பதற்காக, நமது மக்களின் சேமிப்பைத் திரட்டுவதற்குப் புதிய முறைகளில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது அவசியமாகும். சிறு சேமிப்புகளைத் திரட்டுவதற்கான தற்போதைய திட்டங்களை முனைந்து செயல்படுத்துகிற நேரத்தில், மாநில வளர்ச்சிக்கு ஏழை எளிய மக்களும் தொகை வழங்குவதற்கு இயலும் வகையில், ‘பரிசுச் சீட்டுகள்’ நடத்துவதற்கான திட்டமொன்றை வகுப்பது அவசியம் என்றும், அரசு





உணர்ந்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் விவரங்கள் விரைவில் முடிவு செய்யப்பட்டு, அடுத்த நிதி ஆண்டின் தொடக்கத்தில் நிறைவேற்றப்படும். நிதியிடாக் கடன் தலைப்பில், பரிசுச் சீட்டுத் திட்டத்தின்கீழ் பரிசுத் தொகைகளையும், அனுமதி பெற்ற முகவர்களுக்குத் தரகுத் தொகைகளையும் செலுத்திய பிறகு, இத்திட்டத்தின் வாயிலாகக் கிட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிற நிகர வரவினம் ஒரு கோடி ரூபாய் அளவில் இருக்குமென நம்புகிறோம். நமது மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குடும்பமும், இந்தத் திட்டத்தில் பெரும் பங்கு கொண்டு, நமது மாநிலப் பொருளாதாரத்தை வளர்க்க உதவியளிக்குமென்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

**புது நிதி ஆணைக்குழு: அதன் பணிகள்**

44. மேலே நான் எடுத்துக் கூறியுள்ள வரவு-செலவுத் திட்டக் கோட்பாடுகள், நமது நிதி நிலை குலையாது நாம் முன்னேற்றம் காண விழைகிறோம் என்ற உறுதியை, இம் மாமன்றத்திற்கு அளிக்குமென நம்புகிறேன். சிக்கனத்தையும் நிதி ஒழுங்கினையும் பெருமளவிற்குக் கடைப்பிடிக்க வேண்டியதன் தேவையை நாம் ஏற்றுக் கொள்கிற அதே நேரத்தில், மாநிலங்களின் பொறுப்புக்களுக்கும், அவற்றின் நிதி வசதிகளுக்குமிடையே நிலவியுள்ள அடிப்படையான சமநிறைவற்ற நிலையைச் சுட்டிக் காட்டுவது நமது கடமையாகும். நமது திட்டங்களின் மூலம் உருவாக்க எண்ணியுள்ள நல்லதோர் உயர் வாழ்வினை வகுத்துக் கொடுக்கும் வகையில், நமது மக்களின் குறைந்த தேவைகளை, மாநிலங்கள் செவ்விய முறையில் நிறைவேற்ற வேண்டுமெனின், இச் சம நிறைவற்ற நிலையை நாம் நீக்கியாக வேண்டும். இதுவரை நான்கு நிதி ஆணைக் குழுக்களை நாம் கண்டுள்ளோம். ஆனால், அவற்றின் பரிவுரைகள் சம நிறைவற்ற நிலையைச் சீர் செய்வதற்குப் பெருமளவில் பயனளிக்கவில்லை. மாநிலங்களின் தற்போதைய நிறுவனங்களையும் பணிகளையும் பேணிவருவது குறித்து அவற்றின் தேவைகளை இறுதி செய்து அறிந்து, இந்த நிறுவனங்களையும் பணிகளையும் பேணி வருவதற்கு மட்டுமே போதுமான அளவில்

அவைகளுக்கு நிதி வசதிகளை வகை செய்து தருவதில் தான், அவற்றின் முக்கிய முயற்சிகள் நெறிப்படுத்தப் பட்டுள்ளன. எனவே, வளர்ச்சிப் பணிகளின் தேவைகள் அனைத்தும் மத்திய அரசின் விருப்ப உதவிக்கே விட்டு விடப்பட்டு, மாநிலங்கள் மத்திய அரசையே முற்றிலும் அண்டியிருக்கும் நிலைக்குக் கொண்டுவரப் பட்டுவிட்டன. 1969–70-ம் ஆண்டிலிருந்து, புதிய நான்காம் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென்று முடிவு செய்துள்ளதால், புதிய நிதி ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது அவசியமென்று எங்கணும் உணரப்படுகின்றது.

45. எனவே, இத்தருணத்தில், அப்புதிய நிதி ஆணைக் குழுவின் ஆய்வு வரம்பு, ஏனைய பொருள்களோடு, நிதி வசதிகளை மாநிலங்களுக்குப்பகிர்ந்து அளிப்பது குறித்த அரசியலமைப்பின் விதித் துறைகளை ஆழ்ந்து மறு ஆய்வு செய்ய வேண்டும் என்கிற பொருளும் அடங்கும்படி, விரிவுபடுத்தப்பட வேண்டுமென்கிற கருத்தினைத் தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன். புதிய நான்காம் திட்டத்தின் தொடக்கத்திற்குப் போதிய அளவு முன் கூட்டியே, மூன்றாம் திட்டத்திற்கும் நான்காம் திட்டத் திற்கும் இடையே நிறைவேற்றப்பட்டுள்ள ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் பேணுதற் செலவினத்தின் பொருட்டு, மாநிலங்களுக்கு எவ்வகையில் நிதி மாற்றம் செய்து தரவேண்டும் என்கிற குறுகிய கேள்விக்கு விடை பகரும் வகையில், இடைக்கால அறிக்கை ஒன்றினை வெளியிடுவதற்கு ஊறு நேராவண்ணம், மேற்சொன்ன மறு ஆய்வினை நிதி ஆய்வுக் குழு மேற்கொள்ள இயலும். நான் கருதி யுள்ள இந்த மறு ஆய்வு, எந்த வகையிலும் மத்திய அரசின் வலிமையைக் குறைக்குமென்றோ, நாட்டின் ஒற்றுமையைத் தகர்க்குமென்றோ அஞ்சுவதற்கு எவ்வித நியாயமுமில்லை. மாறாக, மாநிலங்களுக்குள்ள பொறுப் புக்களை, அவை நிறைவேற்றுவதற்கு முன்னிலும் சிறந்த முறையில், அதிக நிதி வசதிகளைச் சட்டபூர்வமான அடிப்படையில் அவைகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், அன்றாட நிதித் தொடர்புகளில் மாநிலங்களுக்கும்



– திட்ட ஆராய்வு –



திரு. க. இராமச்சந்திரன், ஐ.ஏ.எஸ்., நிதிச் செயலாளர்.

மத்திய அரசுக்குமிடையே பிணக்குகளும் எதிரெதிர் குற்றச்சாட்டுகளும் நிகழ்வதற்கான வாய்ப்புகள் குறைந்து, நாட்டிற்குப் பொதுவான எல்லாச் செயல்களிலும் மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்கு மிடையே உடன்பாடு மிகுந்த பயனுள்ள கூட்டு மனப்பான்மை வளர்ந்திடவும் இயலும் என்று நான் சாற்ற விரும்புகிறேன்.

46. இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிப்பதில், விளக்கம் நிறைந்த துணை புரிந்த, நிதிச் செயலாளர் திரு க. இராமச்சந்திரன் அவர்கட்கும், அவருடன் பணி யாற்றுபவர்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆர்வம் நிறைந்த ஒத்துழைப்பு தந்ததன் மூலம் அவர்கள் என் பொறுப்பின் பளுவினை மிக எளிதாக்கியுள்ளனர்.

47. இவை கூறி, 1968–69-ம் ஆண்டிற்குரிய இவ்வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இப்பேரவையினர் ஏற்கும்படி வேண்டுகின்றேன்."

சென்னை,
1968 பிப்ரவரித் திங்கள்
28-ம் நாள்.

சி. என். அண்ணாதுரை,
முதலமைச்சர்.

தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் உள்ள எல்லாக் கிராமங்களிலும் பணியாற்றுகின்ற ஊராட்சிகள், நூல் நிலையங்கள், செய்தி நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், மகளிர் மன்றங்கள் முதலிய பல்வேறு நிறுவனங்களுக்கெல்லாம் செல்லும் "கிராமநலம்" இதழில், கிராம மக்களுக்குத் தேவையான பொருள்கள் பற்றிய தகவல்களும், கிராமங்களில் தயாராகும் பண்டங்கள் பற்றிய விவரங்களும் விளம்பரங்களாக ஏற்றுக்கொள்ளப்படும். ஏப்ரல் 1968 இதழிலிருந்து "கிராமநலத்"தில் விளம்பரங்கள் வெளியிடுவதென தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

## "கிராமநலம்" விளம்பரக் கட்டண விவரம்

| | அவ்வப்போது வெளியிடப்படும் விளம்பரங்களுக்கு. (1) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. | குத்தகையாக ஒரே இட அளவிற்கு (குறைந்தது 12 விளம்பரங்கள்). (2) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. |
|---|---|---|
| இரண்டாவது, மூன்றாவது அட்டைப் பக்கங்கள்—(ஒரே வண்ணத்தில்) | | |
| முழுப் பக்கம் .. | 420 | 315 |
| அரைப் பக்கம் .. | 215 | 165 |
| நான்காவது அட்டைப் பக்கம்—(இரண்டு வண்ணங்களில்) | | |
| முழுப் பக்கம் .. | 450 | 325 |
| அரைப் பக்கம் .. | 230 | 170 |
| உள்பக்கம்— | | |
| முழுப் பக்கம் .. | 400 | 300 |
| அரைப் பக்கம் .. | 210 | 160 |



## "மாவட்ட அளவில், உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட சகல பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்"

[மாவட்ட ஆட்சித் தலைவர்களின் (ஊராட்சி வளர்ச்சி) நேர்முக உதவியாளர்களின் கூட்டத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் வேண்டுகோள்]

தமிழகத்தின் எல்லாக் கிராம மாவட்டங்களின் (13 மாவட்டங்கள்) மாவட்ட ஆட்சித் தலைவர்களின் (ஊராட்சி வளர்ச்சி) நேர்முக உதவியாளர்களின் கூட்டம், தமிழக அரசு தலைமைச் செயலகத்தில், 1968 மார்ச் 6, 7 தேதிகளில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், பல்வேறு கிராம வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப் பட்டது. கிராம நல—தல நிர்வாகத்துறைச் செயலாளர் திரு டி. ஏ. எஸ். பாலகிருஷ்ணன், ஐ. ஏ. எஸ்., கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கூட்டத்தின் இறுதியில் உரையாற்றிய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள், தம்முடைய உரையில், கிராம வளர்ச்சித் திட்டங்களைப் பற்றியும், குறிப்பாக மாண்புமிகு முதலமைச் சரின் பிறந்த நாளன்று கிராம வளர்ச்சித் துறை காணிக்கையாக அளிக்கும் ஓராண்டுத் திட்டத்தின் வேலை விவரங்களை செயல்படுத்துவது பற்றியும் தம்முடைய ஆக்கபூர்வமான யோசனைகளையும் கருத்துக்களையும் எடுத்துரைத்தார். கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் திரு வி. நடராஜன், ஐ. ஏ. எஸ். கிராம வளர்ச்சித்துறையின் வேலைத்திட்ட துணைச் செயலாளர் திரு எம். சுவாமிநாதன், ஐ. ஏ. எஸ். கிராம வளர்ச்சித்துறை (பணித்துறை) துணைச்செயலாளர் திரு எஸ். பி. சுந்தரம், மற்றும் கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவல கத்தின் அதிகாரிகளும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கிராம வேலைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள அனுபவ ரீதியான பல் வேறுபட்ட சிக்கல்கள், சிரமங்கள் குறித்து, விரிவாகவும் மனம்விட்டும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அந்தந்த மாவட்டங்களுக்கென்று தனியாக உள்ள பிரச்னைகளும் சுட்டிக்காட்டப்பட்டு, அச்சிக்கல்களைத் தீர்ப்பதற்கான தகுந்த வழிமுறைகளும் எடுத்துக் கூறப்பட்டன.

சீரணிப்படை செயல்படுவது குறித்தும் விவாதிக்கப்பட்டு, சமூகப் பணி புரிவதில் தீவிர ஆர்வம் காட்டி வரும் நாட்டுணர்வு கொண்ட பெருமக்களின் ஆதரவினைப் பெறு வதற்காக தோற்றுவிக்கப்பட்ட, மக்களே முன்வந்து பணியாற்றும் இப்படிப்பட்ட நிறு வனங்கள், சீரிய முறையில் செயல்படுவதற்கான செயல்முறைக் குறிப்புகளும் விவா தத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டன. பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்டுவதற்கான வேலைத்திட்டங்கள், கிராம மனித சக்தித் திட்டம், சத்துணவுத் திட்டம் ஆகியவற்றைத் திறம்பட செயல்படுத்துவதற்காக வேண்டி, அவை ஆய்வுச் செய்யப்பட்டு, அதற்கான உருப்படியான யோசனைகள் எடுத்துக்கூறப்பட்டன.

**ஓராண்டுத் திட்டம் முழு வெற்றியடைய:**

மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த நாள் காணிக்கையான ஓராண்டுத் திட்டத்தின் சிறப்பியல்புகள் பற்றி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், கூட்டத் தினர்க்கு விளக்கிக் கூறினர். இத்திட்டத்தை முழு வெற்றியடையச் செய்ய அனைவரும் முழுமூச்சுடன் பாடுபட வேண்டுமென்றும், அதன் மூலம் கிராம மக்களுக்கு பயனுள்ள சேவையை நாம் செய்தவர்களாவோம் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

ஒரு குறி பிட்ட ஊராட்சி மன்றம் ஒன்றில் வீட்டு வரியானது 500-லிருந்து 600 சதவிகிதம் வரையில் உயர்த்தப்பட்டதை அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டி, இந்த வரி உயர்வினை, பொதுமக்கள் தன்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தனர் என்றும், அதைப் பற்றி தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் பரிசீலனை செய்யப்பட்டது என்றும் கூறினர். வரி விதிக்கின்ற அதிகாரம், வரி உயர்வினை எதிர்த்து வரும் அப்பீலின் பேரில் முடிவு எடுக்கும் அதிகாரம் ஆகியவை ஊராட்சி மன்றங்களிடமே உள்ளன என்றும், வரி அப்பீல் விஷயங்களில் அரசாங்கம் குறுக்கிடுவதற்கில்லை என்றும், ஆகவே, இந்த வரி

உயர்வும், அதற்கான தீர்வு காண்கின்ற முறையும், ஊராட்சி மன்றங்களின் கையிலேயே உள்ளன என்பதையும், மனுச் செய்து கொண்ட மக்களிடம் அமைச்சர் விளக்கினர். இதைத் தெரிந்துகொண்ட மக்கள், ஊராட்சித் மன்றத் தலைவரையே அணுகி, விதிக்கப் பட்ட அதிக வரியைக் குறைக்க வழிவகை செய்து கொண்டனர். இந்த வரி உயர்வுக் கான காரணம், ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி அதிகாரத்திற்கு வந்ததின் நேரடி விளைவே என்ற கருத்தை மக்களிடையே பரப்பும் வகையில், ஒரு சிலர் அரசியல் பிரச் சாரம் செய்வதற்கு இதைப் பயன்படுத்துகின்றனர் என்றும், இத்தகைய பிரசாரத்திற்கு எந்தவித அடிப்படையும் இல்லை என்பதையும் அமைச்சர் எடுத்துரைத்தார். மக்களுக்கு உண்மையை எடுத்துச் சொல்வது அவசியமென்றும், அதன் வாயிலாக மேற்சொன்ன முறையில் நடைபெறும் தவருன பிரசாரத்திற்கு அப்போது தான் இடமிருக்காது என்றும் அமைச்சர் தெளிவுபடுத்தினர்.

**திருவள்ளுவரின் ஈராயிரம் ஆண்டு விழா :**

உலகத் தமிழ் மாநாடு மிகச் சிறப்பான முறையில் நடைபெறுவதில் ஒத்துழைத்துப் பாடுபட்ட எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், அமைச்சர் அவர்கள் தம்முடைய நன்றியறிதலைத் தெரிவித்து, அவர்களுக்கு (மலர் விழாக் குழுத் தலைவர் என்ற முறையில்) தமிழ் மாநாட்டு மலரினையும் அன்பளிப்பாகக் கொடுத்தார், 1969—ல் நடைபெறவிருக்கும் திருவள்ளுவரின் ஈராயிரம் ஆண்டு விழாவினை அமைச்சர் குறிப்பிட்டுக் கூறி, அதிகாரிகள் இந்த விழா அடுத்த ஆண்டு நடைபெற விருப்பதை தங்கள் கருத்தில் கொள்ள வேண்டு மென்றும், நடைபெறப்போகும் இவ்விழா, அகில உலகினரையும் தமிழகத்தின் பால் ஈர்க்கும் தன்மையில் அமையப் பணியாற்ற வேண்டுமென்றும் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

**உணவு உற்பத்தித் துறையில் சிரமிப்படையினர் பணி :**

சிரமிப் படையினரின் அடிப்படைக் கொள்கைகளை அமைச்சர் அவர்கள் விவரித்துக் கூறி, கட்டடங்கள் கட்டுதல், சாலை அமைத்தல் போன்ற காரியங்களில் மட்டும் சிரமிப் படையினர் கவனம் செலுத்துவதோடு அல்லாமல், நீர்ப்பாசன வாய்க்கால்களை, குளங்களை சுத்தப்படுத்துதல் போன்ற உணவு உற்பத்திப் பணிகளில் அதிகமாக அவர்கள் தங்களுடைய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார். ஊராட்சி மன்றங் களுக்கு ஆதாயம் தரக்கூடிய வேலைத்திட்டங்களைப்பற்றி அமைச்சர் குறிப்பிட்டுப் பேசு கையில், சமுதாயக் கிணறுகள், ஊராட்சித் தோட்டங்கள் போன்ற பிரதேசப் பிரச்சினை களுக்கு ஆங்காங்குள்ள அதிகாரிகளே தீர்வு காணவேண்டுமென்றும், பொதுப் பணத்தைச் செலவிடும்பொழுது, மிகுந்த கவனமும், எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டுமென்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

ஊராட்சி மன்றக் கூட்டங்கள் ஒழுங்காக அவ்வப்பொழுது தவருமல் நடைபெற வேண்டுமென்றும், ஊராட்சிகள் சரிவர வேலை செய்கின்றனவா என்பதைக் கவனிக்க தகுந்த நடவடிக்கைகளை, மாவட்ட அதிகாரிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் விருப்பம் தெரிவித்தார். அதிகாரிகள் அந்தந்தப் பகுதிகளுக்கு அடிக்கடி சென்று, ஊராட்சி மன்றக் கூட்டங்கள் அவ்வப்பொழுது ஒழுங்காக நடைபெறுவதற்கான வழிவகைகளை வகுத்துக்கொடுக்க வேண்டும். அந்தந்தப் பிரதேசங்களில் கிடைக்கும் ஆதா ரங்களையும், திறமைகளையும் பயன்படுத்தி, ஊராட்சி நிறுவனங்களின் வருமானத்தைப் பெருக்குகின்ற முறையில், கிராம மக்களுக்கு பயனளிக்கும் பணிகளை மேற்கொண்டு, அதி காரிகள் செயலாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இறுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அனைவரும் ஒரு குடும்ப பாசத்துடன் தாங்கள் எல்லாம் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒற்றுமை உணர்வுடன் பாடுபட்டு, ஓராண்டுத் திட்டத்தின் இலக்குகளை அடைவதில் ஒன்றுபட்டு உழைத்து, வெற்றி தேடித் தரவேண்டும் என்று அனைவரையும் விரும்பிக்கேட்டுக்கொண்டார். அதிகாரிகள்—பொதுமக்கள் அனைவரின் ஆர்வம் நிறைந்த ஒத்துழைப்புடன், 1968 செப் டம்பருக்குள் ஐந்து அம்சம் திட்டம் வெற்றியுடன் செயல்படுத்தப்பட்டு விடும் என்பதில் தனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருப்பதாக அமைச்சர் உறுதி தெரிவித்தார்.


ஆசிரியக் குழுத் தலைவர் :

திரு T. A. S. பாலகிருஷ்ணன், I.A.S.


வெளியிடுபவர் : திரு வி. நடராஜன், ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர் : திரு எஸ். வேங்கடசாமி எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9, Chairman of the Editorial Committee: Thiru T. A. S. Balakrishnan, I.A.S.,
**Wrapper printed at Vadapalani Press, Madras-26.**




REGD. NO. M. 7217
தமிழ்நாடு அரசாங்கம்
1968





குழுவின் தலைவர்
திரு எஸ்.எஸ். வாசன் அவர்கட்கு
தமிழக அரசு
தலைமைச் செயலக (கோட்டை)
உருவம் பொறித்த
வெள்ளிக்கேடயம்
பரிசளிக்கப்பட்டது...
(ஊர்வலக் காட்சி விரைவில்
திரைப்படமாக வெளிவரும்)

தமிழ்ப் பண்பாட்டின்
எழில் ஏற்றம்



உலகத் தமிழ் மாநாட்டு
ஊர்வலக் காட்சியை
உருவாக்கித் தந்த கலைஞர்
பெருமக்களுக்கு
-தமிழக அரசின் பாராட்டும்
ரிசளிப்பும் (12-2-68)